# உதயசூரியன்

UTHAYASURIYAN

விலை ரூபா 1-00

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 27-2-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 22



SRI LANKA
RECEIVED
1981-2-24
PERIODICALS
UNIVERSITY ... LIBRARY


**அடுத்த இதழில்...**

✲ இதில் வருவது பதில்
(கேள்வி பதில்)
எனும் புதிய பகுதி
ஆரம்பமாகின்றது!

சமூக, பொருளாதார, அரசியல், இலக்கியம் தொடர்பானகேள்விகளை வாசகரிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

## மாணவர் வாழ்க்கையை மண்ணுக்கும்

# அதர்ம யு. என். பி. அரசாங்கம்!

### ஆளவந்தோர்மீது அமிர் ஆவேசம்!

இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதியில் பெரும் குழறுபடிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் இந்த அரசுமீது, ஏன், தங்கள் சொந்த வாழ்க்கையின்மீதே வெறுப்பும் விரக்தியும் அடைந்துள்ளனர். மூன்று விசேட சித்திகளும் ஒரு சாதாரண சித்தியும் பெற்ற மாணவி ஒருவருக்குப் பல்கலைக் கழகத்தில் அனுமதிகிடைக்கவில்லை. எதிர்பாராத இந்த ஏமாற்றத்தால் அவர்தற்கொலை செய்யப்போகின்றேன் என்று கூறுகின்றார்.

நாம் அரசியல் பேசலாம் ஆனால், எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கையோடு விளையாடக் கூடாது. எனவே, பல்கலைக்கழகத் தெரிவில் இடம் பெறும் குழறு படிகளுக்கு உடனே முடிவு காணவேண்டும் மாவட்ட அடிப்படை பின் தங்கிய பிரதேசம் என்பதெல்லாம் செல்லுபடியற்றதாகிவிட்டது.

இவ்வாறு - சபை ஒத்திவைப்புப் பிரேரணையின் போது பல்கலைக்கழகத் தெரிவு முறையில் தவறுகள் நடந்திருப்பது பற்றிக் கேள்வி எழுப்பிப் பேசுகையில் எதிர்க்கட்சி முதல்வரும், தமிழர் தலைவருமான அமிர் இனவாத யு. என். பி. அரசின் போக்கை மிகவும் காரசாரமாகக் கண்டித்துப் பேசினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது -

'இம்முறை மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒரேஒருவர் தான் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறார் பின்தங்கிய பகுதி அடிப்படையில் மன்னார் மாவட்டத்திலிருந்து 9பேர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் ஆனால் இம்முறை இருவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் அனுமதிக்கப்பட்ட இருவரில் ஒருவர் ஏற்கனவே பல்கலைக் கழகத்தில் படித்துவருகிறார்'

(8-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்குகளுக்கு பாதுகாப்பு?

பௌத்த பிக்குகள் சம்பந்தப்பட்ட பிணக்குகளை விசாரிப்பதற்கென தனிப்பட்ட (விசேட) நீதிமன்றங்களை அமைப்பது குறித்து அரசாங்கம் ஒரு வெள்ளை அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிட்டது.

பிக்குமாரின் ஒழுக்கம் பராமரிப்பு, வதிவிட உரிமை சம்பந்தமாக எழும் பிரச்சனைகள் துர்நடத்தை சம்பந்தமான முறைப்பாடு, பிக்குமாருக்கிடையே ஏற்படும்சச்சரவுகள், சொத்துக்கள், அபிவிருத்தி பற்றிய பிரச்சனைகளெல்லாம் உத்தேச நீதிமன்றமே விசாரிக்கும்.

## அரசாங்க எம். பி. அலறல்!

பல்கலைக்கழக மாணவர் அனுமதியில் ஏற்பட்டுள்ள பாரபட்சத்தைச் சுட்டிக்காட்டி அரசாங்க எம். பி. டாக்டர் நெவில் பெர்ணான்டோ பாராளுமன்றத்தில் பேசுகையில் நான் இது காலவரை எதிர்க்கட்சித் தலைவரின் கொள்கையை ஆதரித்தவன் அல்ல. ஆனால், இவ்விஷயத்தில் அவர் கொண்டிருக்கும் கருத்தினை ஆதரிக்கின்றேன்.

இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணா விட்டால் படித்த வாலிபர்கள் ஒருநாள் வீதியில் இறங்கிப் புரட்சி செய்வார்கள் இதை அரசாங்கம் மனதிற் கொள்ளவேண்டும். இப்படி- அவர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

## குருக்கள் மடத்தில்

## 'தேவா'வுக்கு கரிப்பூச்சு!

சென்ற 1981-2-14ம் திகதி உள்நாட்டு அலுவல் மந்திரி திரு. தேவநாயகம் அவர்கள் பட்டிருப்பு தொகுதியில் உள்ள குருக்கள் மடம் கிராமத்திற்கு வருகை தந்தார்.

அவரது வருகையை அறிந்த குருக்கள்மடம் த. வி. கூட்டணியினர் முன்கூட்டியே வீதிகள் தோறும் கறுப்புகொடிகள் கட்டி தங்களது முழு எதிர்ப்பையும் தெரிவித்தனர். கறுப்புக்கொடிகளை பொலிசார் மரங்களில்ஏறி அகற்றினார்கள் மேலும்மேற்குறிப்பிட்டதினத்தில் த. வி. கூட்டணியினர் மூன்றுவகையான துண்டுப்பிரசுரங்களை அச்சடித்து பொது மக்கள் மத்தியில் வினியோகம் செய்தார்கள்.

கூட்டம் நடைபெறவிருந்த கலைவாணி மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவமாணவிகளில் பெரும்பான்மையினர் கூட்டம் நடைபெற்ற இடத்

(8-ம் பக்கம் பார்க்க)

## இருட்டடிப்புக்கு ஓர் சான்று!

மதுரை ஐந்தாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகைதந்த
தமிழீழ விடுதலை மறவர்கள் — வெளிநாட்டுப் பேராளர்கட்கு

### ★ வழியனுப்பு - தேனீர் விருந்து ★

காலம் : 16—1—1981 வெள்ளிக்கிழமை மாலை 5 - 30 மணி
இடம் : "உட்லாண்ட்ஸ் ஓட்டல்" எட்வர்ட் எலியட்ஸ் சாலை, மைலாப்பூர், சென்னை-4

தலைமை : டி பி. இராதாகிருட்டிணன், (தி.மு.க தலைமை நிலைய எழுச்சறிஞர்)

வரவேற்புரை : அரு. கோபாலன், (பொதுச்செயலாளர், தமிழீழத் தோழமைக் கழகம்)

அறிமுகவுரை : ஏ. எஸ். மணவைத்தம்பி,
(இலங்கைக் குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் செயலாளர், த. தோ. க.)

சிறப்பு விருந்தினர்கள் :

**நாவலர் திரு. அ. அமிர்தலிங்கம்**
(இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் - த. வி கூட்டணி செயலாளர் நாயகம்)

வீராங்கனை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

திரு. சு. விசுவநாதன், (யாழ் மாநகரத் தந்தை)

திரு. தி. சிறீகாந்தன், (அமைப்பாளர், "1982-ல் விடுதலை ஈழம்" மசாசூசெட்ஸ்)

திரு. தி. சிறீதரன், (செயலாளர், அமெரிக்க ஈழத்தமிழ்க் கழகம்)

மற்றும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், மலேசியா, சிங்கை, பிற வெளிநாட்டுத் தமிழ்ப் பேராளர்கள்.

பேரன்புடையீர்,

இவ்விருந்தில் தாங்களும் கலந்து கொண்டு, நமது சிறப்பு விருந்தினர்களைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவண்,
தமிழீழத் தோழமைக் கழகம்.
66, அண்ணாசாலை, சென்னை-600 002.

மதுரை மாநாட்டுக்குச் சென்றிருந்த வெளிநாட்டுப் பேராளர்களுக்கு தமிழீழத் தோழமைக் கழகம் 16-1-81ல் சென்னை வுட்லண்ட்ஸ் ஹோட்டலில் வரவேற்பளித்துச் சிறப்பித்தது. இவ்வைபவத்தின்நடுநாயகமாக தலைவர் அமிர் அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். ஆனால் இந்நிகழ்ச்சி குறித்து ஒரு புகைப்படத்தை வெளியிட்ட சுதந்திரன் (8-2-1981) தலைவர் அமிர் பற்றி முற்றாக இருட்டடிப்புச் செய்திருந்தது. மேற்படி வைபவத்திற்கான அழைப்பிதழையே இங்கே காணுகின்றீர்கள்.

## இராசதுரைக்கா சோமண்ணை சொல்கிறார்?

நடந்து கொண்டிருக்கிற வேலைகளை நினைச்சவுடன் நிறுத்தலாம் அது சுலபம். ஆனால், நட்ட அத்திவாரக்கல்லுகளைப் பிடுங்குவது கஷ்டம். அந்தக் கலலுகள் மட்டக்களப்பில் ஒன்று இரண்டே, நூற்றுக் கணக்கில் எல்லே இருக்கு.

(தினபதி 21-2-81)

✲ ✲ ✲

## மன்னாரில் 15 ஆயிரம் சிங்கள மீனவர்கள்!

தென்னிலங்கையிலிருந்து பதினைந்தாயிரம் சிங்கள மீனவர்கள் மன்னாருக்குவந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். ஆனால் இப்பகுதியிலிருந்து (மண்டைதீவு) மீனவர்கள் மன்னாருக்குச் சென்று தொழில் செய்யத் தயங்குகிறார்கள். நீங்கள் வந்தால் உங்களை நாங்கள்வரவேற்கத்தயாராய் இருக்கின்றோம்.

திரு.பி.எஸ்.சூசைதாசன் பா. உ.
(வேலணைக் கருத்தரங்கில்)

## தமிழ் ஈழம் தமிழர் தாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாதிரிக் கிராமம் சிங்கள மக்களுக்காகவே அமைக்கப்படுகிறது!

## திறப்பு விழாவைப் புறக்கணித்து வவுனியா 'சிவா' பிரதமருக்குக் கடிதம்!

சிங்களம்பேசும்மக்கள்வாழும் வாரிக்குட்டியூர் கிராமத்தில் மாதிரிக் கிராமத்தை உருவாக்கத் தீர்மானித்த போது எனது ஆட்சேபனையைப் பலமுறை அமைச்சுக்குத் தெரிவித்தேன் 1977-ம் ஆண்டு இனக் கலவரத்தின் போது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்ட மூன்று தமிழ்க் கிராமங்களை இதற்கென நான் சுட்டிக் காட்டினேன். ஆனுல் எனது சிபார்சைப் புறக்கணித்து விட்டு சிங்கள மக்கள் வாழும் வாரிக் குட்டியூர் கிராமத்திலேயே மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுவவுனியாத்தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரிக் கிராமத்திறப்பு விழாவில் பங்கேற்க மறுத்து, வவுனியா சிவா சிறிலங்கா பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும்தெரிவித்திருப்பதாவது

இலங்கையில் சகல மாவட்டங்களிலும் மாதிரிக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. எந்தெந்த மாவட்டங்களில் மாதிரிக் கிராமங்கள்



உருவாக்கப் படுகின்றனவோ அந்தந்த மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனையின் பேரிலேயே தகுதியான கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கக்கட்சிப்பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் மாவட்டங்களாக இருந்தாலென்ன எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் மாவட்டங்களாக இருந்தாலென்ன எந்தவித் பாகுபாடுமின்றி உங்களது அமைச்சு குறித்த ஒழுங்கைக் கடைப்பிடித்து வந்திருக்கிறது. இதற்கு உதாரணமாக யாழ்ப்பாணம், மன்னர், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சுட்டிக் காட்டலாம்.

257 தமிழ்க் கிராமங்களையும், 11 முஸ்லிம் கிராமங்களையும் 24 சிங்களக் கிராமங்களையும் கொண்ட வவுனியா மாவட்டத் தொகுதியில் மாதிரிக்கிராமம் அமைப்பதற்கு மிகவும் பின் தங்கிய ஒரு கிராமத்தையே நான்உங்களது அமைச்சுக்கு சிபாரிசு செய்திருந்தேன். ஆனுல் எனது சிபாரிசு நிராகரிக்கப்பட்டது.

சிங்களம் பேசும் மக்கள் வாழும் வாரிக்குட்டியூர் கிராமத்தில் மாதிரிக் கிராமத்தை உருவாக்கத் தீர்மானித்த போது எனது ஆட்சேபனையை பலமுறை அமைச்சுக்குத் தெரிவித்திருந்தேன். 1977 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்ட மூன்று தமிழ்க் கிராமங்களை இதற்கெனநான்சுட்டிக்காட்டியிருந்தேன். இத் தொகுதியின் பிரதிநி என்ற வகையில் எனது சிபாரிசுக்கும் கருத்துக்கும் மாறுக வாரிக்குட்டியூர் கிராமத்திலேயே மாதிரிக்கிராமம் அமைக்கப்பட்டு திறப்பு விழாநடைபெறவிருக்கின்றது.

எனவே, இத் திறப்புவிழாவில் கலந்துகொள்ள நான் விரும்பவில்லை. ஆனுல் எனக்கு அழைப்பு அனுப்பியமைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

எதிர்வரும் 28ம் திகதி மேற்படி மாதிரிக் கிராமத் திறப்பு விழாநடைபெறவிருககின்றது.

---

# மகா பெரிய மந்திரிப் பதவி

## ஓர் உரையாடல்

தம்பி: ''அண்ணே''

அண்ணன்: ''என்ன தம்பி''

த; ''இந்த யாழ்ப்பாண மாவட்ட அமைச்சருடைய கிட்டடிக் காலத்துப் பேச்சுக்களைப் பார்த்தியே, கொஞ்சம் நெஞ்சை நிமிர்த்தி முறைய்க்கிற மாதிரியெல்லோ கிடக்கு!''

அ: ''ஓம் கவனிச்சன்''

த: ''என்ன காரணம்? உனக்குத்தான் ஒவ்வொண்டுக்கும் விளக்கம் புரியுமே, எனக்கும்சொல்லு கேட்பம்-அத்தாச்சி, ஒரு சுடுதண்ணி தாவன், களைப்பாய்க் கிடக்கு!''

அ: ''தம்பி, முதல் நான் வேறொண்டை விளங்கப் படுத்த வேணும். இந்த மாவட்ட அமைச்சர் பதவி எந்த விதமான அதிகாரங்களுடன் கூடியது, மாவட்ட அமைச்சருடைய பொறுப்புக்கள், கடமைகள், அவரில்லாமல் நடக்கமுடியாது போகக்கூடிய முக்கிய கருமங்கள் இதுகளைப் பற்றிய ஒரு தெளிவு நமக்கு முதலில் வேணும்''

த: ''அண்ணே, மிளகாய்க் கண்டுக்குத் தண்ணி இறைக்கப் போகவேணும். சுருக்கமாக விளக்கிச் சொல்ல வேணும்.''

அ: ''அப்பிடித்தான் சொல்லப்போறன்- உனக்கு மட்டக்களப்பு மாவட்ட மந்திரியாக இருந்த கனகரத்தினத்தாரைத் தெரியுமோ?''

த: ''ஏன் தெரியாது? கூட்டணி வேட்பாளராகப் பாராளுமன்றம் சென்று, திசைமாறிய பறவையாகி, மட்டக்களப்பு மாவட்ட மந்திரியாகி, மனுஷன் செத்தும் சிவலோகம்- சீ- நரகலோகம் போய், மாசக் கணக்காப் போய்ச்சே!''

அ: ''அங்க தான் விஷயமிருக்கு! இதில கொஞ்சம் நிறுத்தி நல்லா யோசிக்க வேணும். செத்தவர் செத்து மாதக் கணக்காப் போய்ச் செல்லோ? யாரையாவது அந்த இடத்துக்கு நியமித்தார்களா?''

த: ''அவர்ர தங்கைச்சியாமண்ணே, யாரோ மூளியலங்காரி- சீ- ரங்கநாயகி எண்டு ஒருத்தியைப் போட்டிருக்கிறதாப் பேப்பரில் கிடந்துதே?''

அ: ''தம்பி, அவவை நியமித்தது பொத்துவில் பாராளுமன்ற ஆசனத்துக்கு மட்டும் தான். மட்டக்களப்பு மாவட்டமந்திரிப் பதவி இன்னும் காலி தான். புரியுதா?''

த: ''சரி, புரியுது, மேலே சொல்லு.''

அ: ''ஒரு அரசாங்கக் கந்தோரில், ஒரு சாதாரண எழுதுவினைஞர் சில மணி நேரம்தாமதித்துவந்தாலும் கூட எத்தனையோ வேலை தடங்கலாகுது. மாவட்ட அமைச்சர் வெற்றிடமொன்று பலமாதங்களாக நிரப்பப்படாமல் இருக்குது. எந்த வேலையும் இந்தக் காரணத்தால் தடங்கலாகாமே நடக்குது. இந்தப் பதவியைப் பற்றி நீ என்ன தம்பி நினைக்கிறே?''

த: ''விளங்குது; கோ எஹெட், கோ எஹெட்!''

அ: ''டாய், என்னடா இங்கிலீசைக் குறுக்க விடுகிற? இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்நாடகம் நடத்துறவன் மாதிரி! கேள் கதையை, மந்திரிப் பதவி, பிரதி மந்திரிப்பதவி இதுகளுக்குத் தகுதி தராதரமில்லாததாகக் கழிக்கப்பட்ட பின்வரிசையூ என் பீக்காரருக்குள், சிலதுகளைத் திருப்திப்பண்ணுவதற்கான ஒரு அதிகாரமற்றதும் அவசியமற்றதுமான பதவிதான் இந்த மாவட்ட அமைச்சர் பதவி. இதை ஏதோ தன் தலையில் முளைச்ச கொம்பு மாதிரி நினைத்துக்கொண்டு, யாழ்ப்பாண மாவட்ட மந்திரிப் பொடியன், அரசியலில் அனுபவம், அறிவு, ஆற்றல் நிறைந்த எமது தலைவர்களையும் இயக்கத்தையும் விமர்சிப்பதும், நமக்கு ஆலோசனை கூறுவதும் எனக்கும் தான் ஆவேசமாகக் கிடந்தது.''

த: ''அண்ணே, உதில ஆவேசப்பட ஒண்டுமில்லை! இந்த மாதிரிப்பட்ட சிறிசுகளை எங்கட ஊருகளில் சில பச்சோந்திகள் கொடி கட்டி, மாலை போட்டு, ஆரவாரம் செய்து தலையில் தூக்கி வைச்சுக் கூத்தாடுதுகள்! அது தான் ஆவேசப்பட வேண்டிய விசயம். சரி, தேத்தண்ணியைக் குடி!!''

## அக்கினிக் குஞ்சு

---

# நற்பிட்டிமுனைகருத்தரங்கும் சுதந்திரன் நச்சுச் செய்தியும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிராமயாத்திரையின் போது நற்பிட்டிமுனையில் நடைபெற்ற கருத்தரங்கில் நிறைய இளைஞர்களும் கூடியிருந்தனர். அவர்களில் ஒரு பக்கமாக ஒதுங்கியிருந்த நான்கு இளைஞர்களில் இருவர் எழுந்து. கேள்வி கேட்டனர். அவர்களிடம் கேள்விகளை எழுதித் தருமாறும். நீங்கள் யார்; எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் குறிப்பிடுமாறும் கூட்டத் தலைவர் கேட்டார். அந்தஇளைஞர்கள் 'தர்க்கீகம்' என்ற ஏட்டையும் கையில் வைத்திருந்தனர்.

தலைவரின் கேள்விக்குப் பதிலளித்த அந்த இளைஞர்கள், தங்களிடம் பேனைவாங்கக்கூட வசதியில்லை, நாங்கள் எந்த இயக்கத்தையும் சேராதவர்கள், எங்கள் பெயரைச்சொன்னால் பொலிசார் பிடித்துஅடிப்பார்கள், உங்களிடம் ஜீப் வண்டியும் வசதிகளும் உண்டு எனக் கிண்டலாகச் சொன்னார்கள்.

நான் கருத்தரங்கின் இறுதியிலேயே பேசினேன். சுதந்திரனில் (18-2-81-4-ம்பக்கத்தில்) வந்திருப்பதுபோல் நரன் பேசவில்லை. அந்த இளைஞர்கள் இப்படி சுதந்திரனுக்குச் சொல்லியிருப்பார்களென்றும் நம்பவில்லை. அவ்விளைஞர்களில் ஒருவரை அண்மையில் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்திலும் சந்தித்துக் கதைத்திருக்கிறேன். **சுதந்திரனில் இதுசம்பந்தமாக வந்தசெய்திகள்பொய்யானவை.**

எனது பேச்சின் சுருக்கம் இதுதான்:

''நீங்கள் எங்கிருந்தோ களைப்படைந்து வந்திருக்கிறீர்கள்: சாப்பிட்டீர்களோ, எங்கிருக்கிறீர்களோதெரியவில்லை உங்கள் மீது அனுதாபப்படுகின்றேன். நீங்கள் கூறிய சில வார்த்தைகள் வேதனையைத் தருகின்றன.

நீங்கள் 'ஈழம்' என்பது எமக்குத் தெரியும். நாம் 'தமிழ் ஈழம்' என்கிறோம். ஏன்' தமிழ் ஈழம்' என்று சொல்லப் பயப்படுகிறீர்கள். தமிழீழந்தான் இலட்சியமானல்- உங்கள் பெயரைச் சொல்லக்கூடாது என்றால், பொலிசார் பிடிப்பார்கள் என்றால் இப்படியான பகிரங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பிரச்சனைப்படாமல் இருக்கவேண்டிய இடத்திலிருந்து இயங்குங்கள். எமது இலட்சியத்தைப் போராடித் தான் பெறமுடியுமென்பதால் அக்களத்திலே ஒன்றுகச் சந்திப்போம் என்ற உணர்வுகளோடு இயங்குங்கள்.

உண்மையிலேயே உங்களை விட நாம் விலை குறைந்த ஆடைகளையே அணிந்திருக்கிறோம். நாமும் வசதி குறைந்தவர்கள் மட்டுமல்ல, எத்தனையோ கொடுமைகளையும் அனுபவித்தவர்கள். ஆனல் தமிழீழ இலட்சியத்திற்காக மக்கள் சக்தியைத் திரட்ட எந்தப் பயமுமில்லாமல் இன்றும் இயங்குகிறோம்..''

தலைவர் அமிர் அவர்களும், நானும் இறுதியில் அவர்களைச் சந்தித்துக் கதைத்துவிட்டுத் தான் வந்தோம். கூட்டம் முழுமையாக நடந்து முடிந்தது.

--- மாவை சேனுதிராசா

---


# போதும் போதும் பொத்துவில் ரங்கா!

சிறுபான்மையினமாக இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு முன்பு எப்பொழுதும் இல்லாத அளவு உரிமைகளையும் சலுகைகளையும் இந்த அரசாங்கம் வழங்கி வருகின்றது. (தினபதி 19-2-81)

இப்படி - பொத்துவில் யு. நாடாளுமன்றஉறுப்பினர் திருமதி ரங்கநாயகி பாண்டிருப்பில் நடந்த கூட்டமொன்றில் கூறியிருக்கின்றூர்.

ஜே. ஆர். போட்ட பிச்சைக்காகப் போகுமிடமெல்லாம் தமிழர்களின் தன்மானத்தை விற்றுவரும் பொத்துவில் நாயகியிடம் 'போதும் போதும், உங்கள் நன்றியுரை' என்று அவரது தொகுதி மக்களே அவரிடம் சொல்லியிருக்கிறூர்களாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விடுதலை இயக்கங்களின் பலம் மக்கள்சக்தியே. ஒருதேசிய இனத்தை விடுதலைப் பாதையில் நடத்திச் செல்வதாயிருந்தால் மக்கள் மத்தியில் நாம் விடுதலை பெறவேண்டுமென்ற உணர்வைக் கட்டி வளர்க்க வேண்டும். அந்த உணர்வு வளர்வதற்குத் தம் அடிமை நிலையும் அதனால் நாம் அடையும் துன்பம், சிறுமை-வேதனை, வெட்கம்-இழப்பு, இழிவு-இவையெல்லாம் மக்களின் மனதை உறுத்தும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். நீண்ட காலம் அடிமைப் பட்டிருந்த மக்கள் மத்தியில் இந்நிலையை ஏற்படுத்துவதே பெருஞ் சிரமம். ஆட்சியாளர் தரும் அற்ப சலுகைகளை நன்றி உணர்வுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதே அடிமைகளின் உள்ளத்தில் பதிந்திருக்கும் கருத்தாகும். அவற்றைப்பெறுவதற்காகப் பல்லிழித்து, மாலை சூட்டிப், பல்லாண்டுபாடிப், பணிந்து வணங்கவேண்டு மென்பது அவர்கள் எண்ணம். இந்த அடிமை மனப்பான்மையின் பிரதிபலிப்பே அமைச்சர்களைக் கொடி, குடை, ஆலவட்டத்தோடு வரவேற்கும் தன்மை! அமைச்சர் மழலைத் தமிழில் 'வணக்கம்' என்று கூறிவிட்டால், இரண்டு வசனம் பேசிவிட்டால் தாம்பெரிய கௌரவம் பெற்றுவிட்டதாக ஆனந்தக் கரகோஷம் செய்யும் நிலை தமது அடிமை நிலையை ஏற்றுக் கொண்ட மக்களின் செயலே.

# தவறு நேராமல் தவிர்ப்போம்,

# தமிழின ஒற்றுமை காப்போம்!

ஈழத்தமிழ் மக்களில் பெரும்பாலோர் தம் இழிநிலையை உணர்ந்து, அந்நிலையைக் களைந்து சுதந்திர புருடர்களாக வாழ வேண்டுமென்ற உணர்வைப் பெற்றுவிட்டனர். எனினும் எம்மில் ஒருசிறு பகுதியினரின் ஈனச்செயல்கள் இனத்திற்குக் கொண்டுவரும் இழிவைத் தவிர்க்க நாம் வழிகாண வேண்டும். அரசினால் எமது பகுதிகளிற் செய்யப்படும் அபிவிருத்தி வேலைகள் எமக்குத் தரப்படும் வெகுமதிகள் அல்ல - சலுகைகள் அல்ல. அவை எமதுஉரிமைகள் என்பதைத்தமிழ் மக்கள் உணரவேண்டும். அரசாங்கப்பணம் அமைச்சர்களின் தனியுடைமையல்ல. எப்பகுதிகளில் அப்பணம் செலவிடப்படினும் ஏழைத்தமிழர்களின் நன்னடத்தைக்குச் சன்மானமாக அவர்களிடும் பிச்சையல்ல. இதை எமதுமக்கள் எல்லோருடைய உள்ளத்திலும் இடித்துப் பதியவைக்க வேண்டியது அத்தியாவசியம். பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தில் எமது உறுப்பினர்கள் சில அமைச்சர்களைப் பாராட்ட வேண்டிய அவசியம் என்ன என்று இலட்சிய இதயங்கள் கேட்கலாம். நாம் பாராட்டுகிறோம் என்ற கருத்துத் திட்டமிட்டு அரசின் ஊதுகுழல்களான பத்திரிகைகளாலும் வானொலியாலும் எமது மக்கள் மத்தியில் பரப்பப்படுவதே என்பதை அப்பேச்சுகளை முழுதாகப் படித்தால் புரியும், சிலஅமைச்சர்கள் செய்த பல அநீதிகளைச் சுட்டிக்காட்டிவிட்டு நாம் நடுவுநிலையில் நின்று பேசுகிறோம் என்பதை வலியுறுத்தும் பொருட்டுச் சரியாக அவர்செய்த ஒருவிடயத்தைக் குறிப்பிட்டால் போதும். பேசப்பட்ட அத்தனை அநீதிகளையும் - சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையும் - இருட்டிப்புச் செய்துவிட்டுச் சரியாகச் செய்ததாகக் கூறப்பட்ட ஒருவிடயத்தையே வானொலியும் பத்திரிகைகளும் தலைப்புச் செய்தியாய் வெளியிடும். இந்த உண்மையை உணரவோ - உணர்ந்து வேண்டுமென்றோ நம்மவர் சிலர் திரும்பத்திரும்ப அதையே எழுதியும் மக்கள் மத்தியில் கூறியும் இயக்கத்தை மாசுபடுத்த முனைந்து நிற்கிறார்கள்.

இதேபோன்றது தான் எமது பிரதேசங்களுக்கு வருகைதரும் அமைச்சர்களின் உத்தியோக பூர்வமான மாநாடுகளிலும் நாம் கலந்து நிகழ்த்தும் பேச்சுக்களும்! எதிரியாக இருந்தாலும் எமது நாட்டுக்கு வரும் ஒருவரை வரவேற்கிறேன் என்பது அடிமைத்தனமாகாது. பண்பட்ட தமிழ் இனத்தின் பெருமைக்கு அது எவ்விதத்திலும் இழுக்காகாது. இப்படியான மகாநாடுகளில் கலந்து அறியாதவர்கள் அங்கு பேச வேண்டிய இங்கிதம் தெரியாதவர்கள்தான் அப்படிக்கூறுவார்கள். நாமும் உரிமைபெற்ற நிலையில் இருந்தால் இன்னும் சிறப்பாக வரவேற்பது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் நாம் அடிமை இனமாக இருக்கும் நிலையில் எம்மை அடக்கி ஆளும் ஆட்சியின் அமைச்சர் என்றவகையில் நாம் ஆடம்பரமாக வரவேற்பது தவறு - அடிமை மனப்பான்மையைக் காட்டுவதாயிருக்கும். சிலசந்தர்ப்பங்களில் ஆட்சியாளருக்கு எதிரான நேரடிநடவடிக்கையின் ஓர் அங்கமாக அமைச்சர்களை முற்றாகப் பகிஷ்கரித்திருக்கிறோம். ஹர்த்தால், கடையடைப்பு, கறுப்புக்கொடி முதலியவற்றுடன் எதிர்ப்பைக்காட்டியிருக்கிறோம். அமைச்சர்கள் எமது பிரதேசத்திற்கு வருகை தரும்போது மக்கள் எப்படிநடக்க வேண்டும் என்பது அந்தந்த நேரத்தில் விடுதலை இயக்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைப்புத் திட்டவட்டமாகத் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். ஆட்சியாளருக்கு எதிராக நாம் இன்று நேரடி நடவடிக்கையில் ஈடுபடவில்லை. எனவே கறுப்புக்கொடி, ஹர்த்தால் போன்ற செயலில் மக்கள் இறங்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி அழைக்கவில்லை. அதேநேரத்தில் எம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அரசின் அமைச்சர் என்பதை மனதிற்கொண்டு எவ்வித வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் மக்கள் கலந்துகொள்ள வேண்டாமென்று மாத்திரம் இலட்சியஇதயங்களுக்கு வேண்டுகோள் விடுத்தோம். எமதுநிர்வாகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை எவ்வித வரவேற்பும் அளிக்க வேண்டாமென்று ஆணையிட்டோம்.

பிரதமர் பிரேமதாசாவின் வருகையையொட்டி நடந்த வரவேற்பு ஏற்பாடுகள் எல்லாம் அரச ஊழியர்களால், அரசாங்கப்பணத்தைக்கொண்டு, அரசாங்கவாகனங்களைக்கொண்டு செய்யப்பட்டன. இதற்கென்று மாவட்டத்திற்கு வெளியிலிருந்து சிற்றூழியர் உட்பட ஆயிரக் கணக்கானோர் தருவிக்கப்பட்டிருந்தனர். நூற்றுக் கணக்கான வாகனங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன. இவற்றினால் அலங்காரங்களும் வரவேற்பு ஒழுங்குகளும் நன்றாகவே செய்யப்பட்டிருந்தன. ஆனால் மக்களின் ஈடுபாடு மிக மிகக் குறைவாகவே இருந்தது என்பதை அநுபவம் மிக்க அரசியல்வாதியான பிரதமர் பிரேமதாசா தெரிந்தேயிருப்பார். தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியுடனேயே இருக்கின்றனர் என்பதை அவர் மறைமுகமாக ஒப்புக் கொண்டுமிருக்கிறார். அந்த மக்களைக் கவரவேண்டுமானால் மறைந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்திப், பகிரங்கக் கூட்டத்தில் அவர்களைப் பாராட்டிப் பேச வேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்து நடந்து கொண்டார். வெளிப்படையாகத் தென்னிலங்கை மக்களுக்கு எதைக் கூறினாலும் தமிழ் மக்கள் தம் விடுதலை இயக்கத்துடனேயே நிற்கின்றனர் என்பதை அவர் உணரவே செய்திருப்பார்.

அவருடைய உத்தியோக பூர்வமான மகாநாட்டில் நாமெல்லாம் கலந்து கொள்ள வேண்டுமென்பது எமது செயற்குழு எடுத்த ஏகமனதான முடிவாகும். நாம் நேரடியான எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிராத இந்த நேரத்தில் மக்களுடைய உரிமையை வலியுறுத்தி எமது பகுதிகளில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்திகளை வற்புறுத்தவே நாம் அங்கு சென்றோம். நான் அங்கு பேசிய பேச்சில் அரசின் இறக்குமதிக் கொள்கையால் பாதிக்கப்பட்ட வடபகுதி விவசாயிகளின் அவலநிலையை இடித்துக்கூறினேன்; வேலை நிறுத்தத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளருக்கு இழைக்கப்பட்ட அநீதியைச் சுட்டிக் காட்டி மீண்டும் வேலை வழங்குமாறு வற்புறுத்தினேன்; மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலை வைத்து அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரினேன்; அதேநேரத்தில் எமது இயக்கத்திற்கு திட்டவட்டமான கொள்கைகள் உண்டென்பதைக் குறிப்பிட்டு உங்கள் வருகையின் நோக்கம் அரசியல் பிரசாரமாயிருந்தால் உங்களைக் களத்தில் சந்திக்க நாம் தயார் என்றும் சவால் விட்டேன்- நிச்சயமாக இலட்சிய இதயங்கள் எனது பேச்சில் நான் எதையும் விட்டுக்கொடுத்துப் பேசியதாகக் கருதமாட்டார்கள். நான் சவால் விட்டுப்பேசியும் பிரதமர் அதற்கு எவ்வித பதிலும் அளிக்காது தவிர்த்துக் கொண்டதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

நமது மத்திய செயற்குழு எடுத்த இன்னொரு முடிவு கன்பொலை மாதிரிக்கிராமம். எமது உறுப்பினரான திரு. இராசலிங்கத்தின் பெருமுயற்சியினால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்தனை பேரும் எடுத்த முடிவின் படி அமைக்கப்பட்டது என்பதை அம்மக்கள் நன்கு உணரும்பொருட்டு அவர் அத்திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென்பது. அத்தீர்மானத்திற்கு அமைவாகத் தம்பி இராசலிங்கம் அந்நிகழ்ச்சியில் பங்கு பற்றினார். அதற்கு கூட்டணியின் மத்திய செயற்குழு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கின்றது. அங்கு அவர் பேசிய பேச்சைப் பற்றியும் அவர் திறப்பு விழா மலருக்கு அளித்த செய்தி பற்றியும் பல வகையான தலைப்புகளுடன் செய்திகள் பத்திரிகைகளிலும், வானொலியிலும் வெளி வந்தன.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல அரசாங்கத்தின் பிரசார பலம் அவர் நிலையைத் தமக்குச் சாதகமாகக் காட்டுவதற்கு முற்று முழுதாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் திறப்பு விழா மலருக்குக் கொடுத்த செய்தியில் இம் மாதிரிக் கிராம அமைப்பில் எனது பங்கு பற்றியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்கு பற்றியும் குறிப்பிட்ட சில பகுதிகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. அவருடைய செய்தியை முழுதாகப் பார்த்தே இதைக் கூறுகிறேன். எனினும் அவர் பிரதமருக்கு மாலைசூட்டியதாக வந்த செய்தி இலட்சிய இதயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை நான் நன்கு காணுகிறேன். திரு. இராசலிங்கம் அனுபவம் முதிர்ந்த அரசியல்வாதியல்ல. அவருடைய சிறந்த அறிவு, நேர்மை, விசுவாசம் இவற்றைக் கண்டு அரசாங்க சேவையில் கல்வி அதிகாரியாக இருந்தவரை அப்பதவியைவீசி எறிந்துஇயக்கவேட்பாளராகத் தேர்தல் களத்தில் குதிக்க வைத்தோம். தம் இளம் குடும்பத்தின் வருங்காலம் முழுவதையும் பணயம் வைத்து அவர் முன் வந்தார். அவருடைய அந்தத் தியாக மனப்பான்மையை நாம் என்றும் மறக்க முடியாது.

இவ்வளவு செலவுடன் வந்த பிரதமர் பிரேமதாசா தான் எதையோ சாதித்து விட்டதாகக் காட்ட, முன்பு திரு. இராசதுரைக்கு வலை வீசியது போல இங்கும் வலை வீசியிருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். அப்பழுக்கற்ற நேர்மையாளரான தம்பி இராசலிங்கத்திடம் இந்தப் பயறு அவியமாட்டாது என்பது திரு. பிரேமதாசாவிற்கும் நன்கு தெரியும். இலட்சிய இதயங்களுக்கு நான் ஒன்றைக் கூறிவைக்க விரும்புகிறேன். தமிழினத்தில் புரையோடிய புண்ணாக இருக்கும் சாதிப்பிரச்சனையைத் தீர்க்கத் தந்தை செல்வாவும் இயக்கமும் எத்தனை நடவடிக்கைகளை எடுத்தாலும் இன்னும் அந்த வியாதி எம்மை விட்டு நீங்கவில்லை என்பதை நாம் உணர்ந்தேயாக வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற நிலையிலும் தம்பி இராசலிங்கம் எத்தனையோ புண்படுத்தலுக்கு மத்தியில் பணி புரிந்து வருகின்றார் என்பதை நாம் மறக்க முடியாது. அதேநேரத்தில் அவரை வெற்றி பெறச் செய்ததன் மூலம் உடுப்பிட்டித் தொகுதி ஏற்படுத்திய மாபெரும் புரட்சியையும் நாம் மறக்க முடியாது.

எம் மத்தியில் இருக்கும் பலவீனங்களை ஆட்சியாளர் பயன் படுத்த முற்படுவது இயற்கையே. கன்பொலைக் கிராமமக்கள் அந்த வகையில் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டே திரு. இராசலிங்கம் திறப்புவிழாவிற்குச் செல்ல வேண்டுமென்று நாம் தீர்மானித்தோம். அதனால் ஏதாவது தவறு ஏற்பட்டிருந்தால் இயக்கம் முழுவதுமே அதற்குப் பொறுப்பாகும். வருங்காலத்தில் அப்படியான நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க ஆவன செய்வோம். அதை விட்டு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றசெயல்களிலும் சொற்களிலும் இறங்க வேண்டாமென்று பண்பட்ட இலட்சிய இதயங்களை வேண்டுகிறேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவமானம் அடைந்த அகலிகை!



**500** வாக்குப்புகழ் அமைச்சர் - கற்குடாத் தொகுதியின் கனம் - முன்னுள் நீதி - இந்நாள் உள்நாடு - மாண்புமிகு தேவநாயகம் அவர்கள் - மட்டக்களப்பு மண்ணின் மானத்தை எப்படியாவது கப்பலேற்றியே தீரவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்! இல்லையெனில்-

கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியை இந்தமண்ணில் கட்டிக் காத்து வருகிறேன் என்று மார்தட்டிச் சொல்வாரா?

ஐக்கியதேசியக் கட்சிக்காக உயிரையும் விடத் தயார் என்பது போல் அடித்துப் பேசுகிறாரே இந்த மனிதர்-அப்படி அதில் என்னத்தைக் கண்டு மயங்கி விட்டார்?

சிறிலங்காவை சிங்களவன் கையில் கொடுத்து விட்டு வெள்ளைக்காரன் வெளியேறும் முன்பே - சிங்களமே அரியாசனத்தில் வீற்றிருக்க வேண்டுமென்ற சின்னத்தனமான தீர்மானத்தைக் கொண்டுவந்த கட்சி இந்த ஐக்கியதேசியக்கட்சி!

தீர்மானத்திற்குத் திரைமறைவிலே தூபம் போட்டு - அதை அரங்கத்திற்கும் கொண்டு வந்த அதி உத்தமர் ஜே. ஆரைத் தலைவராகக் கொண்ட கட்சி இது!

அமைச்சர் பதவிக்காக அரசாங்கத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கிறாரே தொண்டமான் - அவர் பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சொல்லப்படும் மலையகத் தமிழரை நாடற்ற அனாதைகளாக ஆக்கி அழகுபார்த்த அக்கிரமக் கட்சி!

தமிழர்களின் தாயகமான அம்பாறை மாவட்டத்தை சிங்களமயமாக்கத் திட்டம்தீட்டி அதைத் தீவிரமாக அமுல்செய்து வரும் தீமையே உருவமான கட்சி!

அசுரத் தன்மை வாய்ந்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் அகோரப் பசிக்கு - அம்பாறையென்ன திருகோணமலையும் போதாதென்று மட்டக்களப்பு மண்ணிலும் தனதுகரடிக்கால்களைப் பதித்துக் கொண்டிருக்கும் கட்சி!

1956 ஆனி 5இல் தனிச்சிங்கள மசோதாவை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நடாளுமன்றத்தில் கொண்டுவரும் முன்பு-களனியிலே மாநாடு கூட்டி இனவாதத்தை கக்கிய கட்சி!

1958லும் 1977லும் நடைபெற்ற தமிழின வேட்டைக்கு இரைதந்து.- தமிழர்களை இரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்த இராக்கதர்களின் கட்சி!

பௌத்த மதத்துக்கு மட்டுமே பல்லக்குத் தூக்கி மற்ற மதத்துக்குப் பாடை தூக்க முற்படும் கட்சி!

**இத்தகைய இலட்சணங்களைக் கொண்ட - இரண்ணியன்கள் நிறைந்த ஐககியதேசியக் கட்சியை மட்டக்களப்பு மண்ணில் கட்டிப்பிடித்து கொஞ்சிக் குலாவி கலவி நடத்தினேன் என்று காது கிழியத் தேவநாயகம் கத்தினால் - அந்த மண்ணின் மானம் போகாதா? தன்மானத் தமிழினத்தின் தலைகுனியாதா?**

இந்த தேவநாயகத்திற்கு என்ன நேர்ந்து விட்டது?

தமிழரின் தொழிற் பிரச்சனை ஒன்றைத் தவிர்த்து-ஏனைய பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் தீர்த்துவிட்டது (வீரகேசரி 19-2-81) என்று சொல்லுகிறாரே மனிதனின் மூளை என்ன குழம்பியா போய்விட்டது?

கடந்த ஆண்டில் பல்கலைக் கழகங்களின் மருத்துவ பீடத்திற்கு 175மாணவர்கள் (தமிழ்மொழி மூலம்) தெரிவுசெய்யப் பட்டனர் - ஆனல் இந்த ஆண்டு ஆக 93 பேர்!

பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றென அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட மன்னார் மாவட்டத்தில் இம்முறை ஒரேஒரு மாணவர் மாத்திரமே மருத்துவ பீடத்தை அணுக முடிந்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த அநியாயத்தை எதிர்த்து தமிழ் மாணவர்கள் போர்க்கோலம் பூண்டிருப்பது கூடவா தேவநாயகத்துக்குத் தெரியாமல் போய்விட்டது?

**மந்திரி பதவியின் மயக்கம் - சொந்தப் புத்தியைக் கூடவா சோரம் போகச் செய்யும் ஆற்றல் படைத்தது?**

தேவநாயகத்தின் தமிழீழத் துரோகச் செயலுக்கு உடந்தையாக பொத்துவிலில் இருந்தும் ஒரு புதுமுகம் புறப்பட்டிருக்கிறது.

தமிழரின் பிரச்சினைகளை ஜே. ஆர். அரசு தீர்த்து வருகின்றது-இப்படி-அதுவும் கிளிமொழி பேசுகின்றது!

இவர்கள் இருவரையும் மிஞ்சும் விதத்தில்- சிறிலங்கா என்னும் அத்தினபுரத்தில் அரவக் கொடி உயர்த்தி ஆண்டுவரும் ஜே.ஆரின் படையில் கர்ணனக விளங்கும் மட்டக்களப்பு மண்ணின் முன்னுள் முடிசூடா மன்னன் இராசதுரை மானமாவது மண்ணாங் கட்டியாவது என்ற தோரணையில் ஈழத்தமிழினத்தை இடுகாட்டிற்கு அனுப்பும் பணியில் இரவுபகலாக ஈடுபட்டிருக்கின்றார்.

இந்தமூவரின் இழிசெயலைப் பார்க்கும்போது மட்டக்களப்பு மங்கை மனதிற்குள்ளேயே அழுது குமுறுகின்றாள்.

'அபிவிருத்தி' என்ற போர்வையில் என்னை அழிக்கத் துணிந்து விட்டார்களே என்று அவள் அங்கலாய்க்கின்றாள்.

சூடு - சுரணை இல்லாத இவர்களால் எனது சுயமரியாதைக்கு ஏற்பட்டகளங்கத்தை-கறையை யார் கழுவப் போகின்றார்கள் என்று அவள் கதறித் துடிக்கின்றாள்.

**இந்திரனைத் தழுவிய பாவத்தால் கல்லான ஏந்திழை அகலிகை - ஓர் இராமபிரானை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போல -**

இராசதுரை தேவநாயகத்தை இறுகப்பற்றியதால் ஏற்பட்ட பாவத்திலிருந்து விடுதலை பெற- மட்டக்களப்பு மங்கையின் மகரவிழிகள் ஓர் கோதண்ட இராமனையே எதிர்பார்த்து கிடக்கின்றன -

அறியாமல் செய்த பாவத்திலிருந்து மட்டக்களப்பு மங்கை விமோசனம் பெறுவாள் என்ற நம்பிக்கை நமக்கிருக்கின்றது!

ஆசிரியர் பேசுகிறார்

# தனித்தமிழ் இயக்கத்திற்காக உழைத்த பேரறிஞர்!

## பாவாணர் படத்தைத் திறந்துவைத்து பைந்தமிழ்ப்பாவலர் பரந்தாமனார் பேச்சு!

தனித்தமிழ்இயக்கத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மேதை--மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் என்று பாவாணர் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய பைந்தமிழ்ப் பாவலர் அ.கி. பரந்தாமனார் குறிப்பிட்டார்.

திருவண்ணாமலை தி. மு. க, மாநாட்டில் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்துப் பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் பேசியதாவது:-

பாவாணர் அவர்கள் ஏறத்தாழ 30 ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து 'அகரமுதலி' என்ற சொற் கோவை தயாரிப்பதிலே ஈடுபட்டு வந்தார்கள். தொடர்ந்து இரவு--பகலாக இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

தமிழகப் புலவர் குழுவிலே சிறிது காலம் இருந்தார். அதன் பிறகு அதில் இருந்து விலகிக் கொண்டார். ஏறக்குறைய 25 ஆண்டுகள் பல உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றினார். அதற்குப் பிறகு தனது 54-வது வயதில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றினார். ஆங்கே அவருடைய வரலாறு மிகவும் எடுப்பாக இருந்ததால் தொடர்ந்து5 ஆண்டுகள் பணியாற்றினார்.

### மூத்த மொழி தமிழே!

பாவாணர் உலக மொழிகளிலேயே தமிழ் மூத்தமுதல் என்றும்--அதில் இருந்துதான் மற்ற மொழிகள் தோன்றின என்றும் கூறியிருக்கிறார்.

அதை இப்போது பலநாட்டு அறிஞகளும் ஒப்புக்கொள்ளும் நிலை வந்திருக்கிறது.

ஜப்பான் மொழியில் 400 சொற்கள் தமிழை அடிப்படையாகக் கொண்டு இருப்பதாக ஒரு ஜப்பானிய பேராசிரியரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஆப்பிரிக்காவில் உள்ள ஆப்பிரிக்கா மொழியில் பல சொற்கள் தமிழைச் சார்ந்து இருப்பதாக அங்கே பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்ற பேராசிரியர் ஒருவர் கூறியிருக்கிறார்.

செக்கோஸ்லோவிக்கியாவில் இருந்து வந்துள்ள ஒரு அறிஞர் இப்போழுது ஐரோப்பிய நாடுகளில் பலரும் தமிழைப் படிக்க விரும்புகிறார்கள் என்று கூறியிருக்கிறார். அவர் 1960-ம் ஆண்டில் டாக்டர் மு. வ இடத்திலே கட்டப்பொம்மன் வரலாற்றை ஆய்வு செய்து டாக்டர் பட்டம்பெற்று இருக்கிறார்.

அத்துடன் அவர் தனது மனைவிக்கு எழுதுகிற கடிதங்களை எல்லாம் தமிழிலேயே எழுதுகின்றார். தன்னைப் போலவே தனது மனைவியையும் தமிழில் திறமையுள்ளவராகமாற்றியுள்ளார்.

### பொருள் மிகுந்த தமிழ்ச் சொற்கள்

தமிழிலே எந்தச் சொல்லை எடுத்துக் கொண்டாலும் அவை ஒவ்வொன்றுக்கும் பொருள் இருக்கும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

குறிப்பாக புடலங்காய் என்றால்- 'புடல்' என்றால் துவாரம். ஆகவே துவாரம் உடையகாய் என்று பொருள். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதை எடுத்துக்காட்டி, தமிழில் பாவாணர் விளக்கினார்.

பாவாணர் எப்போதும் பிற மொழிச் சொற்களை கலந்து பேச மாட்டார். தூய தமிழில்தான் பேசுவார். 'ஜூஸ்' என்றுசொல்ல மாட்டார். பிழிதல் என்று தான் சொல்வார். அமாவாசை என்று சொல்ல மாட்டார். கார்முகம் என்று தான் சொல்வார்.

இப்படி மறைமலை அடிகளாருக்குப் பிறகு பாவாணர் தூய தமிழில் பேசியும், எழுதியும் வந்ததோடு 'அகரமுதலி' என்ற நூலையும் எழுதி வந்தார். அத்தகைய பெரும் சிறப்புக்குரியவரைப்பற்றி இங்கே பேசவும் அவரது படத்தைத் திறந்து வைக்கவும் கலைஞர் எனக்குக் கட்டளையிட்டார்கள். அவருடைய கட்டளையை ஏற்று இங்கே வந்தேன். நீங்கள் எல்லாம் பொறுமையோடு இருந்து கேட்டமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேராசிரியர் பரந்தாமனார் பேசினார்.

தகவல்:
(முரசொலி 12- 2- 81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துரோகப் பணியில் ஈழவேந்தன்!

''பக்தி இல்லாவிட்டால் நாட்டிற்கு நட்டமில்லை. ஆனால் ஒழுக்கம் இல்லாவிட்டால் மனித சமுதாயமே பாழ்பட்டுவிடும். கட்டுப்பாடு இல்லாத எந்த இயக்கமும், அந்த இயக்கத்தின் குறிக்கோளை அடையமுடியாது. ஒருக்கால் அடைந்தாலும் அது நீடித்து நல்வழியைக் காட்டமுடியாது''. இது தந்தைபெரியாரின் கருத்தாகும்.

**விடுதலை இயக்கத்திலே இருப்பவர்கள் இராணுவக் கட்டுப்பாடு உடையவர்களாக, தலைமைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பது தான் ''நியாயம்'' என்பதைத் தாங்கள் மறுக்கமாட்டீர்களென்று நம்புகிறேன்.**

இவ்வாறு இலண்டன் முரசு ஆசிரியர் திரு. சதானந்தன் அவர்கட்கு புதுவை மாநிலத் தமிழ்ஈழத் தோழமைக்கழகத் தலைவர் திரு. மு. வேந்தன் எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது -

ஈழத்தின் தந்தை செல்வா அவர்களுடன் நெருங்கிப் பழகிய வர்கள் நிறையப்பேர்கள் இருந்திருப்பார்கள். அவர்களிலே தலைமை தாங்கி நடத்திச் செல்லக்கூடிய தகுதியைக் கண்டுபிடித்து, தனக்குப் பின் திரு.அமிர்தலிங்கம் அவர்களே தலைவராக வருவதற்குத் தகுதியுள்ளவர் என்று தந்தை செல்வா அவர்களாலேயே அடையாளங் காட்டப்பட்டவர்தலைவர்திரு.அமிர்தலிங்கம் என்பதையும் யாவரும் ஒப்புக்கொள்வர்.

ஆனால் இன்றைக்கு தமிழ் ஈழத்திலே மட்டுமல்ல, தமிழ் ஈழவிடுதலைக்குக் குரல்கொடுக்கின்ற மற்ற வெளிநாட்டிலே இருக்கின்றவர்களிடமும் திரு. அமிர்தலிங்கம்அவர்களின் தலைமைக்கு எதிராகச் சிலதுரோகிகளைஉருவாக்குவதிலே திரு.ஈழவேந்தன் போன்றோர் செயல்படுகிறார்கள் என்பதற்குப் புதுவையிலேதமிழ்ஈழத்தோழமை கழகத்திற்கெதிராகப் போட்

## புதுவை தமிழ்ஈழத் தோழமைக் கழகத்திற்குப் போட்டி அமைப்பா?

டிக்கடை ஏற்படுத்த முயற்சி செய்து பின் போட்டிக்கடை ஏற்படுத்தியும், அந்தப்போட்டிக்கடைக் காரருக்கு ஊக்கம் தரும் விதத்தில் (ஈழவேந்தன் சென்னையில் தங்கியிருந்து காரியமாற்றி பின்என்ன காரணத்தினாலோ புதுவைக்கு வரவில்லை). தாங்களும், ஞான சூர்யன் அவர்களும் புதுவை வந்து போனதாகும்.

தங்களையும் ஞானசூர்யன் அவர்களையும் புதுவை சட்டமன்ற வாயிற்படியில் எதிர்பாராமல் நான்சந்தித்துப் பேசிய போது 28-1-1981ல் தங்களின் கடிதத்திற்கு ஏற்கனவே தாங்கள் தெரிவித்த முகவரிக்குக் கடிதம் எழுதியதைத் தெரிவித்த போது என்னுடைய கடிதத்தைப் பார்க்கவில்லையென்றும், தாங்கள் வேறுவீட்டில் ''சாவியின்'' இல்லத்தில் ''வாசம்'' செய்துகொண்டிருந்ததாகக் கூறினீர்கள்.

தாங்கள்திட்டமிட்டேதமிழ் ஈழத்தோழமைக் கழகத்தைப் புறக்கணித்தும், தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கட்கு எதிரிகளாகக் காரியங்கள்செய்கின்றீர்களென்று நான் கூறிய போது இல்லையென்று கூறிவிட்டு அவசர அவசரமாக நழுவிச் சென்றுவிட்டீர்கள்.

1982ம் ஆண்டு தைப்பொங்கலில் தமிழ் ஈழத்திற்கான விடுதலைப் பிரகடனம் செய்ய முடிவெடுத்த, குழுவைச் சார்ந்த தங்கள் தலைவர் திரு அமிர்தலிங்கம் தலைமையை நம்புகின்ற தமிழ்ஈழத் தோழமைக் கழகத் தோழர்கள் தங்கள் திட்டங்கட்கு லாயக்கற்றவர்கள் என்று எண்ணி, எங்களைப் புறக்கணித்து விட்டு போட்டிக்கடைக்காரர் மூலம், புதுவையிலே செயல்வீரர்களைத் தேடிப்பிடித்து (!) திட்டங்களைக் கொடுத்து விட்டுப் போனதாகக் கேள்விப்பட்டோம்.

அந்த திட்டமும் 1982-ம் ஆண்டில் தமிழ்ஈழம் கிடைக்கக் கோயில்களில் அர்ச்சனை செய்து வேண்டிக் கொள்வது என்ற திட்டமா இருக்காது என்று திடமாகக்கருதுகிறோம்.

ஏனென்றால், ''ஒரு நாட்டின் விடுதலை கோயில்களில் அர்ச்சனைச் செய்து வேண்டிக் கொள்வதின் மூலம் கிடைக்கும்'' என்பதை ஈழத்தின் புரட்சியாளர்கள் திரு. ஈழவேந்தன் போன்றோர் காஞ்சிபுரம் கோயிலில்தமிழ் ஈழ விடுதலை 82-ல் கிடைக்க அர்ச்சனை செய்து வேண்டிக்கொண்டதை, மலேசியாத்தோழர் என்னிடம் மட்டுமல்ல, மற்றவர்களிடமும், இனிமேல் யாரும் போராட்டம் சிறைக்குப் போவது, ரத்தம் சிந்துவது, பத்திரிகையில் எழுதுவது, மேடைகளில் முழங்குவது காரியங்களைச் செய்வது மடத்தனம் என்றும், திரு. ஈழவேந்தனின் திட்டமான கோயில்களில் வேண்டிக்கொள்வதே சிறந்தது என்று வியந்துக் கூறியதை இங்கு நினைவு கூருகிறேன்.

இதைத்தான் ''பக்தி வந்தால் புத்தி போகும், 'புத்தி

## தமிழீழப் போராளிவேந்தன் கண்டனம்!

வந்தால் பக்தி போகும்'' என்று தந்தைப்பெரியார் அவர்கள் கூறினார்கள்.

கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் 26,27, ஆகிய தினங்களில் சென்னையில் திரு. சந்திரகாசன், அவர்களைக் சந்தித்துப்பேசியபோது உங்களிடையே எந்தவிதமான தகராறுகள் இருந்தாலும் அக்கரையோடு (ஈழத்தோடு) நிறுத்திக்கொள்ளுங்கள். இக்கரைக்கு (தமிழகத்திற்கு) கொண்டுவராதீர்கள் என்று கேட்டுக்கொண்டேன்.

ஏனென்றால் திராவிட இயக்கத்திலே ஏற்பட்ட பிரிவால் இங்கே நாங்கள் அனுபவித்து வருகின்றதொல்லையே சான்றாகும்.

உண்மைத் தொண்டர்கள் தங்கள் உழைப்பையும் உயிரையும் தருகின்றார்கள். இதைப்பயன்படுத்தி, சிலர் தங்களை மிகப்பிரபலமாக விளம்பரப்படுத்திக்கொள்கிறார்கள். ''வெளிப்படையான எதிரியைவிட தந்திரமான நடத்தையுடைய துரோகி மிகப்பொல்லாதவன்'' என்று தந்தைபெரியார் அவர்களை கூறியது நினைவு கூரத்தக்கது.

வாய்ப்புக்கிடைத்தால் மீண்டும் தங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.

மிக்க நன்றி,

திரு. வேந்தனின் கடிதம் இவ்விதம் நிறைவடைகின்றது.

# 'மகாதேவா' பாலத்துக்கு மும்முறை அடிக்கல் நாட்ட வேண்டுமா?

பாராளுமன்றத்தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டு கட்டுக்காசையும் இழந்தவர் எவரும் அரசாங்க அதிபராக நியமிக்கப்படவில்லை. திரு. யோகேந்திரா துரைசுவாமி மட்டுமே முதன்முதலாகஇத்தகுதியுடன் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அரசாங்கப் பணத்தை அபகரித்ததற்காகத் தண்டிக்கப்பட்ட எவரும் அரசாங்க அதிபராக நியமிக்கப்படவில்லை. இத்தகுதியுடன் முதன்முதலாக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட கௌரவமும் திரு.யோகேந்திராதுரைசுவாமிக்கே உரியது. இலங்கை நிருவாக சேவையைச் சேராத எவரும் அரசாங்க அதிபராக நியமிக்கப்படுவதில்லை. இந்த மரபை மீறி நிருவாக சேவையைச் சேராத ஒருவர் அரசாங்க அதிபராகின் புதுமைக்கும் இலக்காக விளங்குபவர் திரு.யோகேந்திரா துரைசுவாமியே யாவார்.

கனவிலும் காணமுடியாத - எண்ணியும் பார்க்க முடியாத இந்தப்பதவி சனாதிபதி அவர்களின் விசேட அதிகாரத்தாலும் விசேட உதவியாலும் தமிழ்மக்கள் கருதுவது போல ''அரசியற் காழ்ப்பின்'' அறிகுறியாகவும் திரு. யோகேந்திராதுரைசுவாமிக்குக் கிடைத்தது.

இந்தப் பதவி கிடைத்தவுடன் அவர் தமது செல்வாக்கையும் நடப்பையும் காட்டுவதற்கு அவர் ஒழுங்கு செய்யும் நகைப்புத் திட்டமான சில வைபவங்கள் **''அற்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான்''** எனும் பழமொழியைப் புதுப்பிக்கின்றன.

## அற்பனுக்குப் பவிசு வந்ததால் அர்த்த ராத்திரியில் குடை விரிகிறது!

அவர் அண்மையிலே மகாதேவாப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டி ஒருநாடகம் நடத்தினார். இந்தமகாதேவாபாலத்துக்கு அரசாங்கம் இன்னும் ஒருசதம் தானும் கொடுக்கவில்லை. யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களே தங்கள் தொகுதிகளின் பணத்திலே பிரதமர் பிரேமதாசா யாழ்ப்பாணத்துக்குப் பவனிவரும் முன்னரே ஐந்துலட்சம் ரூபா ஒதுக்கினார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள்ஒதுக்கினபணத்தைக் கொண்டு தொடங்கப்படும்வேலையை அவர்களுக்குத் தெரியாமலும் -- அறிவிக்காமலும் யாழ்மாவட்ட அமைச்சரைக் கேளாமலும் தான்மட்டுமே அப்பால வேலையைச் செய்விப்பவர் என்று மக்களுக்குக் காட்டுதற்காக அடிக்கல்நாட்டு வைபவம் ஒன்றை நடத்தினார். இரண்டு மூன்று நாள்களுள்ளே திட்டமிட்டுச் செய்த இந்த வைபவம் அவசரம் தானா? தேவையா? இந்த வைபவத்தில் பெருஞ்சாலைத் திணைக்களத்தைச்சேர்ந்த எந்த உத்தியோகத்தரும் கலந்து கொள்ளவில்லையாம்.

1937இல் இந்தப் பாலவேலை மகாதேவா அவர்கள் பொது வேலைப் பணிப்பாளராக இருந்த காலத்தில் தொடங்கியது. அப்பொழுது தொடக்க விழா நடாத்தப்பட்டது. பின்னர் திரு.கா.பொ.இரத்தினம் கிளிநொச்சிப் பா. உ. ஆக இருந்த பொழுது அவர் இப்பால வேலைக்கு 28லட்சம்ரூபா ஒதுக்குவித்தார். இந்தப்பணம் ஒதுக்கீடு 1967ஆம் வரவுசெலவுத் திட்டத்திலும் 1968ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது.

அப்பொழுது பொதுவேலைப் பகுதிக்கும் அஞ்சல்தொலைத் தொடர்புப்பகுதிக்கும் அமைச்சராக இருந்த மொன்ராகுசுப விக்ரமா கிளிநொச்சித்தொகுதிக்குச் சென்று கிளிநொச்சி அஞ்சல் நிலையக் கட்டடத்துக்கும் ஒரு நாளில் அத்திவாரமிட்டபின்திரு.கா.பொ.இரத்தினம் அவர்களுடன் இந்தப் பாலவேலையைத் தொடக்குதற்கு 1968இல்அத்திவாரக்கல் நாட்டினார். அதன்பின் வேலை தொடங்கி நடக்காததற்குரிய அரசியற் காரணங்கள் பலவாகும். அவை இப்பொழுதும் தாக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுது மூன்றாம்முறையாக யோகேந்திரா துரைசுவாமி ஏன்இந்த நாடகத்தை நடிக்க வேண்டும். யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் 1980ஆம் ஆண்டில் 3லட்சம்ரூபா ஒதுக்கி இப்பால வேலையைத் தொடங்குதற்கு ஒழுங்கு செய்தனர். இந்தப் பணத்தை இந்த வேலைக்குக் கொடுக்காமல் வேறுவேலைக்கு மாற்றிவிட்டுப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் கணக்கு விட்ட திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு இந்த அடிக்கல் நாட்ட என்ன உரிமை இருக்கிறது. அடிக்கல் மூன்றாம் முறையாக நாட்டவேண்டும் தானா? ✲

''உதயசூரியன்''
சந்தா விபரம்

| | |
|---|---|
| இலங்கை | |
| ஒரு ஆண்டு | 60-00 |
| அரை ஆண்டு | 30-00 |
| இந்தியா | |
| ஒரு ஆண்டு | 75-00 |

(இந்தியா தவிர்ந்த)
வெளிநாடுகளுக்கான சந்தா
25 அமெரிக்கன் டொலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மதுரை மாநாட்டில் மக்களைக் கவர்ந்த ஏடு:

# "இனவெறிப் பிடிக்குள் ஈழத் தமிழினம்" தமிழீழப் போராளிகளின் இலட்சியப் படைப்பு!

தமிழர் விடுதலைக்கூட்டணி ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தமிழ் ஈழக் கொள்கையைப் பரப்பும் அரசியற்களமாக்க எண்ணவில்லை; பலவகையான பிரசாரங்களைச் செய்வதற்கு அதற்கு வாய்ப்பிருந்தும் உலகத் தமிழ் மாநாட்டுப் பேராளர்களாகச் சென்ற அதன் தலைவர்கள் பண்பில்லாத முறையில் நடந்துகொள்ளவிரும்பவில்லை. கூட்டணியின் முன்னைய பிரசாரங்களாலே தமிழ் நாட்டு மக்களுக்குச் சிங்கள அரசாங்கங்கள் தமிழருக்கு இழைக்கும் அநீதிகளும் தொல்லைகளும் அவை கையாளும் அடக்கு முறைகளும் இனக் கொலையும் நன்கு தெரியும். இவற்றை மேலும் விளக்க வேண்டுமெனின் அதனைச் செய்தற்கு ஈழத் தமிழர் தோழமைக் கழகங்களும் அங்குள்ளன.

### தமிழ் ஈழப் பிரசாரம்

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மனிதப் பண்பும் அரசியல் நாகரிகமும் கருதி அரங்குகளில் அரசியல் பிரசாரங்களில் ஈடுபடவில்லை எனினும் தாம் சந்தித்த மக்களுக்குத் தமிழ் ஈழநிலைமைகளை விளக்கியுளர்; ஈழப் போராட்டக் (கண்) காட்சிக்கும் ஆதரவளித்தனர். இவர்களுடன் தமிழ்ஈழம், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி நோர்வே முதலிய நாடுகளிலிருந்து வந்த தமிழ் இளைஞர்கள் தமிழ்ஈழப் பிரசாரத்திலீடுபட்டனர். "பத்தாந் திகதிப் பயங்கர நிகழ்ச்சி" "இனவெறிப்பிடிக்குள் தமிழினம்" எனும் நூல்களையும் பல இடங்களில் பரப்பினர்; பல்வகைச் சுவரொட்டிகளையும் பல பல இடங்களில் காட்சியளிக்கச் செய்தனர்.

### சுண்டி இழுக்கும் சுவரொட்டி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலண்டன் வாலிப முன்னணியின் சுவரொட்டியே எல்லாச் சுவரொட்டிகளிலும் பெரிதாகவும் மக்களை ஈர்த்து உள்ளத்தை உருக்குவதாகவும் அமைந்தது. இந்தச் சுவரொட்டியின் நீளம் 43 அங்குலம் அகலம் 28½ அங்குலம் ஆகும்.

இந்தச் சுவரொட்டியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த ஒன்பது தியாகிகளின் படங்களும் அவர்களைப் பற்றிய விபரங்களும் சிங்கள இராணுவத்தால் உடைக்கப்பட்ட ஒன்பதின்மருக்கும் எழுப்பப்பட்ட நினைவுச் சின்னமும் காட்சியளித்தன. இவற்றுடன் பின்வரும் வாசகங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

- ✲ நான்காவதுதமிழாராய்ச்சி மாநாட்டில் (10-1-74) இலங்கையில் சிங்களப் பொலிசாரால் படுகொலை செய்யப்பட்ட ஒன்பது தமிழர்களை ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும் இந்நேரத்தில்நினைவுகூருவோம்.
- ✲ சுதந்திர தமிழீழம் அமைத்தாலன்றி இலங்கைத் தமிழனுக்கு வாழ்வில்லை.
- ✲ தமிழீழ விடுதலைப் போருக்குத் தமிழன்பர்களே ஆதரவு தாரீர்!
- ✲ தமிழர் விடுதலைக்கூட்டணி வாலிப முன்னணி இலண்டன்.

தமிழ்ஈழப் பிரசாரத்துக்குப் பரப்பப்பட்ட நூல்களில் இரண்டு படிப்போரின் உள்ளத்தையும் ஊனையும் உருக்கத் தக்கன.

### இலட்சிய ஏடு

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் "இனவெறிப் பிடிக்குள் ஈழத்தமிழினம்" எனும் நூல் விதந்து குறிப்பிடத்தக்கது. இந் நூல் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் கொள்கை பரப்பு வெளியீட்டுப் பிரிவால் வெளியிடப்பட்டது.

**"இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று சிங்கள அரசின் காவற்படையினரின் காட்டுமிராண்டித் தனத்திற்குப் பலியான ஒன்பதுஉடன்பிறப்புகளுக்கும் அஞ்சலி செலுத்தி இச்சிறு நூலை அவர்தம் திருமுன்பு படைக்கிறேம்" என்று இந் நூலின் "படையல்" கூறுகின்றது.** ஒன்பது தமிழ் ஈழத் தியாகிகளின்படங்களின் கீழே இப்படையல் உளது.

### தமிழ் ஈழவிதை

**இந்த ஒன்பது தமிழரினையும் பலி கொடுத்த நிகழ்ச்சியே தமிழ்ஈழ விதையைத் தமிழ் மக்கள் எல்லோருடைய உள்ளத்திலும் ஊன்றியது.** இந்த விதைக்குத் தமிழர்விடுதலைக்

(7-ம் பக்கம் பார்க்க)

# ★ விலைவாசி - ஒரு விளக்கம் (1) ★

இன்று நாட்டில் பொது மக்களை மிகவும் பாதிக்கும் பொருளாதாரப் பிரச்சனை விலைவாசி ஏற்றம்தாம்!

விலைவாசி ஏற்றத்தைப் பொருளாதார நிபுணர்கள் பணவீக்கம் என்றும் சொல்வார்கள். மாதச் சம்பளக்காரர்கள், நிர்ணயிக்கப்பட்ட வருமான முள்ளவர்கள், சிறு கடைகள் வைத்திருப்பவர்கள் போன்றோர் விலைவாசி ஏற்றத்தினால் நேரடியாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்த வேதனை போதாதென்று இந்தப் பிரச்சனைபற்றிய குழப்பமடைந்த பேச்சுக்களும், இவர்கள் மீது திணிக்கப்படுகின்றது. அவ்வப்போது ஆட்சியாளர்கள் விலைவாசிகள் குறைய ஆரம்பித்து விட்டன என்றும் கூறுகிறார்கள். கடைத் தெருவில் பொருள்களை வாங்கும் சாதாரண மனிதனுக்கு, இம்மாதிரிப் பேச்சுக்கள் உண்மையோடு தொடர்பற்றவையாக தெரிகின்றன.

பண வீக்கம் அல்லது விலைவாசி ஏற்றம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முயல்வோம்.

வலைவாசி ஏற்றம் அல்லது பண வீக்கம் ஒரு காய்ச்சல் மாதிரி, அளவுக்கு மீறிச் சாப்பிடுதல், மட்டமான உணவுகளைச் சாப்பிடுதல், போதிய அளவு தூங்காமல் இருத்தல், சக்திகளை வீணடித்தல்-இப்படிப்பட்ட வழிகளில் ஒரு மனிதன் இயற்றைக்கு விரோதமாக நடந்துகொண்டால், அவனது உடலில் இயற்கையே ஒரு காய்ச்சலைத் தோற்றுவித்து விடும். ஓய்வெடுத்துக் கொள்ளவும், தனது வழிமுறைகளைத் திருத்திக்கொள்ளவும் அந்த மனிதனுக்கு ஒரு நிர்ப்பந்தத்தை இயற்கையே இப்படித் தோற்றுவிக்கிறது.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் காய்ச்சல் பணவீக்கம். பொருளாதாரத்தின் அடிப்படை விதிகளை அரசாங்கம் மீறும்போது இந்தக் காய்ச்சல் உண்டாகிறது. இது எந்த நாட்டிற்கும் பொருந்தும். எந்தமுறை ஆட்சிக்கும் பொருந்தும். தவறான பொருளாதாரக் கொள்கைகளைத் தவிர்க்கமுடியாததன் விளைவு விலைவாசி ஏற்றம்.

விலைவாகி ஏற்றம்பற்றிச் சில கேள்விகள் மக்கள் மனதில் எழுகின்றன.

விலைவாசிகள் இறங்குகின்றன என்று அரசு அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் கடைகளில் நிலைமை நேர்மாறாக இருக்கிறதே. இது ஏன்?

பணவீக்கம் இருக்கிறதா இல்லையா என்று பார்க்க, ஒரு மிகச்சுலபமான பரிசோதனை காய்கறிகளின் விலை. கிலோ ரூ. 1-50, அல்லது ரூ. 2-00 ற்கு ஒரு வருடத்திற்கு முன்னால் விற்ற காய்கறிகள், இப்போதுபோல் கிலோ ரூ. 3, ரூ. 4 என்று விற்றால் நாடு பணவீக்கக் காய்ச்சலை மிக அதிகமாக அனுபவித்துக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம். இதற்கு அளவுகோலாக ஏன் காய்கறிகளை எடுத்துக்கொள்கிறோம்? காரணம் இருக்கிறது.

ஒரு பொருள் பதுக்கப்பட்டால் பற்றாக்குறை வரும், விலைவாசி ஏறும். இத் அனுபவ உண்மை, ஆகையால், அப்படிப்பட்ட பொருள்களை அளவுகோல்களாக எடுத்துக் கொள்ள முடியாது. காய்கறிகள் ஓரிரு நாட்களில் கெட்டு விடக்கூடிய இயல்பு உடையவை. எந்த வியாபாரியும் அவற்றைப் பதுக்கமாட்டான். ஆகையால், பதுக்கலினால் விலை உயர்வு என்ற நிலை காய்கறி விஷயத்தில் ஏற்படாது. பணப் புழக்கம் அதிகம் இருக்கும் பொழுது, பொருட்களின் விலைகள் உயரும் என்பது பொருளாதார விதி. காய்கறிகள் அந்த நிலையை உண்மையாகப் பிரதிபலிக்கும்.

விலைவாசிப் புள்ளியை மட்டும் வைத்துக்கொண்டு அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் பேசுவார்கள். அவர்கள் எடுத்துக் கொள்வது பண்டங்களின் மொத்த வியாபார விலையைக் காட்டும் புள்ளி. இதில் சிறிய அளவு வீழ்ச்சி ஏற்பட்டால், கடைகளில் நாம் செய்யும் சில்லரைவியாபாரங்களில் அந்த சிறிய வீழ்ச்சி தெரியாது. மொத்த வியாபாரப் புள்ளி வெளியாவதற்குச் சற்று நேரம் பிடிக்கலாம். அதற்குள் பணப்புழக்கம் மேலும் அதிகமாகலாம். அப்போது மீண்டும் விலைவாசிகள் ஏறத்தான் செய்யும். மொத்த விலைப்புள்ளிக்கும், விலைவாசிக்கும் அம்மாதிரி சந்தர்ப்பங்களிலும் சம்பந்தம் இராது.

கன்ஸ்யூமர் ப்ரைஸ் இன்டெக்ஸ் என்பது மற்றொரு புள்ளி விவரம். ஒரு சாதாரண மனிதன் பயன்படுத்தும் பல்வேறு பொருள்களின் விலைகளைக் கொண்டு இது தயாரிக்கப்படுகிறது. எல்லா நேரங்களிலும் இந்தக் கணக்கு சரியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. பலர் முரட்டு ரகத் துணியை உபயோகித்துக் கொண்டிருந்து, பிறகு நல்ல ரகத் துணிகளுக்குப் போகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். எத்தனை பேர் இப்படி மாறியிருக்கிறார்கள். என்பதைக் கவனிக்காமல், முரட்டு ரகத் துணியையே அதிகம் பேர் உபயோகிப்பதாக ஒரு தவறான அடிப்படையில் இந்தப் புள்ளிகள் தயாரிக்கப்படும். இப்படி மக்களின் பழக்கவழக்கங்களில் பல மாறுதல்கள் இருந்தாலும், அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறுவதால் கன்ஸ்யூமர் பிரைஸ் இன்டெக்ஸ் பல சமயங்களில் தவறாகி விடுகிறது.

விலைவாசி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் தவறாகி விடுவதற்கு வேறு ஒரு காரணமும் இருக்கிறது. கன்ட்ரோல் விலை என்று என்ன குறிக்கப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் அரசாங்கம் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. ஆனால், நடைமுறையில் சாதாரண மக்கள், பல பொருட்களையும் அதிக விலை கொடுத்துத்தான் வெளி மார்க்கட்டில் வாங்க வேண்டியிருக்கிறது. இதனாலும் புள்ளி விவரங்கள் தவறாகி விடுகின்றன.

கம்யூனிஸ்ட் நாடுகளில் இந்த விலைவாசிப் புள்ளிகளைத் தயாரிக்கும் வழக்கம் பெரிதும் நடைமுறையில் இருக்கிறது. விலைவாசிப் புள்ளி ஒரே நிலையில் இருக்கும். ஆனால் மக்கள் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டு அவதியுறுவார்கள். இதற்குப் பொருளாதாரத்தில் அமுக்கி வைக்கப்பட்ட பணவீக்கம் என்று சொல்வார்கள். அரசின் கடைகளில் பொருள்கள் கிடைக்காததால், கறுப்பு மார்க்கெட்டில் அதிக விலைகொடுத்து மக்கள்பொருள்களை வாங்கவேண்டி இருக்கும். போலந்து நாட்டில் தொழிலாளிகள் இப்போது எதிர்க்கும் பல விஷயங்களில் இந்த நிலையும் ஒன்று. இந்த விலைவாசிப் புள்ளி விவரங்கள் தவறாகி விடுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு.

'உலகம் முழுவதும் விலைவாசி ஏற்றம் இல்லையா? ஆகையால்தான் இந்தியாவிலும் விலைவாசிகள் ஏறுகின்றன'- என்று சிலர் கூறுகிறார்கள். உலகத்தில் பல நாடுகளில் விலைவாசிகள் ஏறி வருவது உண்மைதான். ஆனால், பல மேலை நாடுகளில் விலைவாசி உயர்வு விகிதத்தை விட, வருமான உயர்வு விகிதம் அதிகமாக இருக்கிறதே, அதை மறந்து விட்டுப் பேசினால் எப்படி? பெட்ரோலியம் விலை, ஈரான் ஈராக் யுத்தம் போன்ற நிலைகள், இவை கூட விலைவாசி ஏற்றத்திற்கு ஓரளவு காரணமாக அமைய முடியும். ஆனால், இவை இருந்தும் கூட நாம் பண வீக்கத்தால் அவதியுற வேண்டிய தேவை இல்லை. அப்படி நமது நாடு அவதியுறுகிறது என்பதற்குக் காரணம் நமது தவறான பொருளாதாரக் கொள்கைகளே.

— எம். ஆர். பய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் தமிழ், எல்லாம் தமிழ் - இது தமிழகத்தில்!

## ● எங்கும் சிங்களம், எல்லாம் சிங்களம் - இது தமிழீழத்தில்! ●

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் திரு. க. பொ. இரத்தினம் பா. உ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆட்சி மொழித்துறை ஆராய்ச்சிக் கருத்தரங்கிலே தமிழ் நாட்டிலே தமிழை எல்லாத்துறையிலும்ஆட்சிமொழியாக்குதற்கு நடைபெறும் முயற்சிகள் ஆராயப்பட்டன.

## இராசதுரை, தேவநாயகம் இரங்க(ல்)நாயகி என்ன செய்கிறார்கள்?

இக் கருத்தரங்கில், ஆட்சி மொழிக்காவலர் திரு. கீ. இராமலிங்கனார் தமிழ் நாட்டிலே தமிழை ஆட்சிமொழியாக்குதற்குத் தாம் செய்த பணிகளையும் இன்னுஞ் செய்ய வேண்டிய பணிகளையும் விளக்கும் கட்டுரையினைப் படித்தார். தமிழ் நாட்டரசின் துணைச் செயலாளராயிருந்து ஓய்வு பெற்ற திரு. சோ. முத்துப்பிள்ளை தமிழை ஆட்சி மொழியாக்குவதில் உண்டாகும் பிரச்சனைகளையும் தக்க ஆட்சித்துறைச் சொற்களை ஆக்க வேண்டியமுறைகள் பற்றியும் உரைநிகழ்த்தினார்.

பாரதஅரசவங்கியின் மொழித்துறைக்குப் பொறுப்பாயிருக்கும் இராமநமசிவாயம் தமிழ் நாடு--பாண்டிச்சேரி மாநிலங்களிலுள்ளபாரதஅரசவங்கியின்அலுவலகங்களில்தமிழைப் பயன் படுத்தற்கு அந்த வங்கி மேற்கொண்டுள்ள நடைமுறைகளை விரிவாக விளக்கினார்.

தமிழ்மொழியிலும் படிவங்களை வெளியிடல், ஆவணங்கள் முதலியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தல், வங்கிக் கலைச் சொற்கள் அகராதியை ஆக்குதல், வங்கி அலுவலர்களுக்கும் பயிற்சியளித்தல் முதலியன பாரதஅரசவங்கி தமிழைப் பயன் படுத்துதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளிற் சிலவாகும்,

வங்கிக்கலைச்சொற்கள் ஆங்கிலம்--தமிழ்பட்டியலின் பிரதிகளை அவர் அக்கருத்தரங்கிற் கலந்து கொண்ட பேராளர்களுக்குக் கொடுத்தார்.

தமிழ் நாட்டுக்காவல்துறையை (பொலிசு)ச்சேர்ந்த திரு. ச. இராசவேலு அவர்கள் மிகுந்த தமிழ்ப்பற்றுடனும் ஆர்வத்துடனும் ''தமிழ்நாட்டுக் காவல் பயிற்சியில் தமிழ்க் கட்டளைச் சொற்கள்'' எனும் விடயம் பற்றி ஓர் ஆய்வுரை விருந்தளித்தார்.

இக்கட்டளைச் சொற்களைக் கொண்ட பட்டியலையும் பேராளர்களுக்குக் கொடுத்தார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் கலாநிதி மா. நன்னன் மூன்றாண்டுகளில் (1981--83) தமிழை அரசஅலுவலகங்கள் எல்லாவற்றிலும் ஆட்சிமொழியாக்குதற்கு தாமும் தமது தமிழ் வளர்ச்சித்துறை அலுவலகப்பணியாளரும் வகுத்துள்ள திட்டத்தை தெளிவாக விளக்கினார்.

தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் தமது முடிவுரையிலே ''எங்கும் தமிழ் எல்லாம் தமிழ்'' எனும் நிலைமை உண்டாக்குதற்குத் தமிழ் நாட்டு அரச பணியாளர் செய்யும் பணிகளைப் பாராட்டினார். தமிழ் நாட்டரசின் கீழ் இயங்கும் தமிழ் வளர்ச்சித் துறையும், மொழிப்பெயர்ப்புத்துறையும், சட்டக்கலைச் சொல்லாக்கக்குழுவும், தங்கள் பணிகளை ஒருமுகப்படுத்துதல் இன்றியமையாததெனவும், இலங்கையிலே வெளியிடப்பட்டுள்ள அரசகருமச்சொற்றொகுதிகளையும் பயன்படுத்தி ஆட்சிச் சொல்லகராதியினை வெளியிடல் நன்று எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் தமிழும் ஆட்சி மொழியாயிருக்கும் என அரசாங்கம் கூறுகின்றதேயொழிய தமிழை ஆட்சிமொழியாக்குதற்கு இன்றுவரை உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. தமிழ் மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஓர் அமைச்சரை (திரு. செ. இராசதுரை) நியமித்திருக்கிறோம், எனச் சிங்கள அரசாங்கம் கூறுகிறது. **இன்றுவரை இந்த அமைச்சர் தமிழ் மொழிச்சட்டத்தை நடைமுறைப்படுத்தப் பயனுள்ள நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை எனவும் தலைவர் இலங்கையிலுள்ள நிலைமையை எடுத்துரைத்தார்.**

---

## மதுரை மாநாட்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநில மாநாட்டுத் தமிழ் ஈழப்பிரகடனம் நீர்ப்பாய்ச்சி உரமிட்டு முளைக்கச் செய்தது. ஈழவிடுதலைப் புலிகளுடன் பல இளைஞர்களும் உயிர்கொடுத்து இந்த முளையைச் சிங்கள ஏகாதிபத்திய மதயானை அழிக்காது பாதுகாத்து வளர்த்து வருகின்றனர்.

இந்த நூலிலே தமிழ்பேசும் மக்களுக்குச் சிங்கள ஏகாதிபத்தியம் இழைத்த கொடுமைகளும் உயிரிழந்தோருடைய படங்களும் விபரங்களும் காணப்படுகின்றன.

**பத்தாந்திகதிப்** பயங்கர **நிகழ்ச்சி எனும் நூல்** 10-1-74 இல் யாழ்ப்பாணத்தில் ஒன்பதின்மர் உயிர் துறக்க நேர்ந்த பொலிஸ் தாக்குதல் சம்பவங்களையொட்டிய விசாரணைக் குழுவின் அறிக்கையாகும். இதனைக் குடிமக்கள் குழுவின் சார்பில் அக்குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி வி. ரி. பசுபதியும் செயலாளர் திரு. வீ. யோகேஸ்வரனும் வெளியிட்டுளர். துண்டுஇதழ்களில் 1982ல் தமிழ் ஈழம் எனும் இதழே தொகையாக எங்கும் வழங்கப்பட்டது. இதில் தமிழ் ஈழம் எனும் நூலுக்கு இந்துப் பத்திரிகையில் வெளியான (ஆங்கில) மதிப்புரையும் ''தமிழ் ஈழம் கோரி ஐ. நா. பொது மன்றத்தில் முழக்கம்'' எனும் நூலுக்கு திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. கொடுத்த அணிந்துரையின் ஒரு பகுதியும் ஐ. நா. பொதுமன்ற அவையின் ஒரு பகுதியும், ஐ. நா. பொதுமன்ற அவையின் படமும் உள்ளன. இந்தத் துண்டிதழ் தமிழ் மாநாட்டின் தொடக்க விழாவின் போது மேடையில் அமர்ந்திருந்தோருக்கும் வழங்கப்பட்டது.

---

# ஆசிரியர் நியமனத்திலும் தமிழர்களை அரசு புறக்கணிக்கிறது!

### பருத்தித்துறை பா. உ. கண்டனம்!

''பருத்தித்துறைத் தொகுதியில் மட்டும் 250 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளனர். 40 வீத அதிபர்கள் தற்காலிக அதிபர்களாகவே கடமையாற்றுகின்றனர். இதனால் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் நற்பண்பு என்பனசரியாக நிலைநிறுத்தப்படாமல் இருக்கின்றது. இந்நிலையை மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறினால் எதிர்காலச் சந்ததியினர் சரியான வழியில் செல்லாமல் குறுகியவழிகளில் ஈடுபட்டு அரசாங்கத்திற்குப் பெரும் பிரச்சினையைத் தோற்றுவிப்பார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு--புலோலி வேலாயுதம் மகாவித்தியாலத்தில் மூன்றரை லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இருமாடிக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியைத் திறந்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் சொன்னார்.

புதிய மாடிக்கட்டிடத்தின் தளத்தை வித்தியாலய ஸ்தாபகர் வேலாயுதபிள்ளை குடும்பத்தைச் சேர்ந்தவரும் வித்தியாலத்தின் முன்னாள் ஆசிரியருமான திரு. ரி. புத்மநாதனும் முதல் மாடியை அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதனும் திறந்துவைத்தனர் இதனைத் தொடர்ந்து அதிபர் ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய எம். பி. துரைரத்தினம் தொடர்ந்து சொன்னதாவது-:

**22 ஆயிரத்தில் 1600 பேரே தமிழர்**

அண்மையில் அரசாங்கம் 22.00 ஆசிரியர்களை நியமித்த போதிலும் 1,600 தமிழர்களே நியமிக்கப்பட்டனர்: சிங்களப் பகுதிக்குப் போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தமிழ்ப்பகுதியிலோ ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. வடமராட்சி கிழக்குப் பகுதியில் இரண்டு பாடசாலைகளுக்கு ஒரு அதிபர் கடமையாற்றிவரும் துர்ப்பாக்கிய நிலைகூட உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் கூடிய ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். தற்போதைய கல்வி முறையில் மாற்றம் செய்ய வேண்டும்.

---

## 'அரிப்பு'த்தீர்க்கும்யு.என்.பி. அரசாங்கப் பத்திரிகை!

தமிழீழச் செய்திகள் அத்தனையும் இருட்டடிப்புச் செய்யும் சிங்கள சிறீலங்கா அரசாங்கத்தின் ஏடான 'டெயிலி நியுஸ்' 'அமைச்சர் தேவநாயகமும் த.வி. கூட்டணிச்செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும்மோதல்'என்றுதலைப்பட்டு ஒரு முழுப் பொய்யை தன் முன் பக்கச் செய்தியாக அண்மையில் வெளியிட்டிருந்தது.

29-1-81ல் யாழ்- செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில், அமைச்சர் தேவநாயகம், த. வி. கூட்டணியை கொழும்பிலிருந்து வெளியேற்றி விட்டதாகவும்- விரைவில் அதனை வடக்கிலிருந்தும் வெளியேற்றி விடுவோம் என்றும் பேசியதாகவே அந்த முன்பக்கச் செய்தி அமைந்திருந்தது.

பிரதமர் உட்பட பலஅமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் உத்தியோகத்தர்களும் பிரசன்னமாயிருந்த அந்தக் கூட்டத்தில் அமைச்சர் தேவநாயகம் அவ்வாறு பேசவில்லை என்று அனைவரும் அறிவர். அப்படிப் பேசியிருந்தால் த. வி. கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சருக்கு நல்ல சூடு கொடுத்து அம்மகாநாட்டையே அரசியல் கூட்டமாக ஆக்கியிருப்பார்கள்.

இதை உணராது 'டெயிலி நியூஸ்' பச்சைப் பொய்களை எழுதி தனதுஅரிப்பைத் தீர்த்துக் கொள்ள முயல்கிறதா என்று நாம் கேட்க விரும்புகின்றோம்.

---

## கருத்தடை செய்வதா? பௌத்த பிக்குகள் சீற்றம்!

''இந்த நாட்டில் உக்கிரமடைந்துள்ள இன, மதப் பிரச்சனைகள் குறித்துக் குரலெழுப்புதற்கு அணிதிரட்ட இன்று ஒருவருமில்லை. புத்த பிக்குக்கள் கூறும் விடயங்கள் செவிடன் காதில் ஊதிய சங்காக அமைகின்றன. இதனால் மகாசங்கத்தினர் வேதனையடைந்து உள்ளனர். இவ்விதமே போனால் சிங்கள இனமும் பௌத்த மதமும் எதிர்காலத்தில் அழிந்துபோக நேரிடும்.'' கும்புறுபிட்டியில் நடைபெற்ற மதநிகழ்ச்சியொன்றுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய, ஆசார்ய கும்புறுபிட்டிய வனரத்தின தேரோ மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் பேசியதாவது, ''கருத்தடைச் சத்திரசிகிச்சை காரணமாக, சிங்கள இனம் பாரியவிபத்துக்கு உள்ளாகும். இனம் நோய்வாய்ப்படும். இனத்துக்கு பெரும் விபத்தாக முடியும். இதனைப்பற்றி எல்லாக் கட்சிகளுமே பேசாது இருக்கின்றன.'' இதே கூட்டத்தில் உரையாற்றிய சுகதபால தேரோ பேசியதாவது ''கருத்தடைச்சிசிச்சையின் பயங்கரத் தன்மை குறித்துச் சிலர் தெளிவில்லாமல் இருக்கின்றனர். இதன் விளைவை 20-30 வருடங்கள் கழிந்த பின்னரே அறியக் கூடியதாயிருக்கும்.'' என்றார்.

உதவிஅரசாங்க அதிபர் ஒருவரும் உரையாற்றிய இக் கூட்டத்தில் கருத்தடைச் சிகிச்சையை உடனடியாக நிறுத்தக் கோரும் பிரேரணையொன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(ஆதாரம்: தவச- 17- 2- 81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. 2. 81ல் நடைபெற்ற கிராம யாத்திரையில் நாரந்தனைக் கந்தசுவாமி கோவில் முன்றலில் மாலை 4 மணிக்கு நடைபெற்ற கருத்தரங்கின் போது திரு. யோகேந்திராதுரை சுவாமிக்கு வரவேற்புவைத்து உத்தியோகம் பெறும் பொருட்டு இரவோடு இரவாக உருவாக்கப்பட்ட சரவணை இளைஞர் மன்றத்தின் தலைவர் எனக் கூறிக்கொள்ளும் லோகேஸ்வரன் என்பவர் கூட்டணியின் செயல்பாடு பற்றியும், திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் 'சாவி' பத்திரிகைக்கு அளித்த பேட்டி பற்றியும் தாமும் கருத்தரங்கில் கேள்வி கேட்டேன் எனப் பத்திரிகைக்கு செய்தி கொடுத்து திரு. யோகேந்திராதுரைசுவாமியின் மனம் குளிரப் பண்ணும் நோக்குடன் கேள்வி கேட்டார். அதற்கு திரு. தர்மலிங்கம் பா. உ. அவர்களும், திரு. திருநாவுக்கரசு பா. உ அவர்களும் ஆணித்தரமாகப் பதில் அளித்தனர். அப்போது அங்கு வந்த கூட்டணிப்பிரமுகர்

# பத்திரிகை விளம்பரத்துக்காக கேள்வி கேட்ட பச்சோந்தி!

ஒருவர் யோகேந்திராவின் கையாட்களுக்கு இங்கு என்ன வேலை எனக் கேட்டபோது அவ்விடத்தில் இருந்து மெல்ல அவர் நழுவிவிட்டார்.

பின்பு மாலை 6 மணிக்கு சரவணை கி. முசங்க நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கின் தொடக்கத்தின் போது திரு. தர்மலிங்கம் பா.உ அவர்கள் பேச ஆரம்பிக்குகையில் மேற்படி கையாள் அதே கேள்வி கேட்க முற்பட்டார்! தலைமை வகித்த திரு. நகுலேசபிள்ளை அவர்கள் கேட்ட கேள்விகளையே மீண்டும் கேட்டு நேரத்தை வீணுக்காது புதிய கேள்விகளைக் கேட்கும்படி கேட்டதும் அவர் மௌனமானூர்.

பின்பு அங்கு வநதுசேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பேச எழுந்த போது மீண்டும் அந்நபர்கேள்விகேட்க முயன்றதை கண்ட எதிர்க்கட்சித்தலைவர் நீங்கள் என்ன கேள்வி என்றுலும் எழுதித்தாருங்கள் நள்ளிரவானுலும் விடை அளிக்கின்றேன் எனக் கூறினூர். உடனே கூட்டத்தில் இருந்து அவர் வெளியேறிவிட்டார்.

இத்தனைக்கும் பின்பே இவர் திரு. யோகேந்திராதுரைசுவாமிக்கு சரவணையில் வரவேற்பு நடத்தி அவரை வரவேற்று அவர் செய்யாதவற்றைச் செய்ததாக தப்பும் தவறுமாக துண்டுப்பிரசுரம்வெளியிட்டுச் சரவணைவாழ் மக்களின் வெறுப்புக்கும் ஆளானவர் என்பது தான் பிறபகுதியில் இருந்து வந்த மக்களுக்கும் கூட்டணித் தொண்டர்களுக்கும் பா. உ. களுக்கும் தெரிய வந்தது. பத்திரிகைகளில் செய்தி வருவதற்காகவே இவர் கேள்வி கேட்டார் என்பது இப்பொழுது சில பத்திரிகைகளில் வெளிவந்த திரித்து வெளியிடப்பட்ட செய்திகளால் நிலைநாட்டப்படுகிறது.

## தூங்கும் பொலிஸார்!

குரும்பசிட்டி கொலை தொடர்பாக பொதுமக்கள் ஒத்துழைக்க மறுக்கின்றூர்கள். என காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. லூசின் விஜயக்கோன் நீதிமன்றத்தில் தெரிவித்த போது, சம்பவம் நடந்து சில தினங்கள் மட்டுமே உஷாராக வேலை செய்த பொலிஸார் இப்போது தூங்கி விட்டார்கள் என்றே கருதவேண்டியிருக்கின்றது என நீதிபதி குறிப்பிட்டார்.

* * *

## அமைச்சரின் சிகப்பு விளக்கு!

எதிர்வரும் காலங்களில் இலங்கையில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படவுள்ளது. இதனுல்தான் நெல்லுக்குப் பதில் கிழங்கு வகைகளைக் கூடுதலாலாகப் பயிரிட வேண்டுமென விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு தீர்மானித்துள்ள தென அதன் பிரதி அமைச்சர் திரு. சந்தர பண்டார அபாய சிவப்புவிளக்குக் காட்டியுள்ளார்."

## குருக்கள் மடத்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு சமூகம் அளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் பட்டிருப்புத் தொகுதி பா. உ. அவர்களின் சேவையை ஆணித்தரமாக விளக்கி இக்கிராமத்துக்கு வருகைதருட மந்திரி அவாகளுல் எமது கிராமத்திறகு ஒனறும் செய்யமுடியாது, இவாகள்அரசியல் லாபம தேடி எமதுகிராமத்திற்கு வருகைதருகிறூகள். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனறு துண்டுப்பிரசுரத்தின் மூலம் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டனர்.

இச்செயல்களை அவதானித்த மந்திரியன்முகம நன்ருக வாடி இருககக் காணப்பட்டது, பொதுக் கூட்டத்தில் மந்திரி அவாகள் வடக்கையும் கிழக்கையும் பிரித்துபேசியபொழுது கூட்டத்தில் கூச்சல்கள் எதிர் ஒலித்தன.

த.வி.கூட்டணியின் கொள்கைகளையும் அதன் லட்சியங்களையும் நாங்கள் ஏற்றுக் கொண்டு செயல்படுகிறேம் என்பதை மந்திரிக்கு தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்ட குருக்கள் மடம் த.வி.கூ.கிளையினர் தவறவில்லை.

தகவல் ,
திருமதி விமலா மதுரநாயகம்

## மாணவர் வாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'மன்னூரில் மட்டுமல்ல, வவுனியாவிலும் இதே நிலைதான் என்று குறிப்பிட்ட அமிர், கொழும்பு ரேயல் கல்லூரியிலிருந்துகூட ஒருவரும் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெறவில்லை என்றூர்.

அமிர் தனது உரையின் போது யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றிலிருந்தும் மேற்கோள் காட்டினூர். 1970ஆம் ஆண்டின் ஏப்ரல் பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களுக்கும், அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் தோற்றிய மாணவர்களுக்கும் பல்கலைக்கழகஅனுமதியில் பாகுபாடு காட்டப்பட்டிருப்பதையும்சுட்டிக்காட்டினூர்

எதிர்க்கட்சித்தலைவரின் இக் கருத்தினைவலியுறுத்தி நல்லூர் எம், பி. சிவா பேசினூர். 'திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலை இருந்த வரையில் இப்படியான பிரச்சினைகளே எழவில்லை. என்றைக்கு திறமையை 'நுளம்புகள்' வட்டமிடத் தொடங்கினவோ அன்று முதல் பிரச்சினைகள் தோன்றி விட்டன. உயர்நீதிமன்ற வழக்கில்கூட, பல்கலைக்கழக மான்யக்குழு சரியான தகவல்களை கொடுக்கவில்லை. அதனுலேயே அம்மன்றத்தின் தீர்ப்பும் பாகுபாடாக அமைந்து விட்டது' என்றூர்.

# காங்கேசன்துறைதொகுதி கிராமயாத்திரை - தலைவர் அமிர் வேண்டுகோள்!

தமிழ் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் மக்கள் மனத்தில் ஆழப் பதிய வைத்து கூட்டணி வேறு தமிழ் மக்கள் வேறு என்ற நிலையை போக்கி, இயக்கத்தையும் மக்களையும் இறுக்கமாகப் பிணைக்கும் பொருட்டும்,

தமிழ் மக்கள் மத்தியில் சாதி சமய வேற்றுமைகளைக் களைந்து இன ஒற்றுமையை வளர்க்கும் பொருட்டும்,

மக்களின் குறைகளையும் தேவைகளையும், கருத்துக்களையும், நேரிற் கேட்டறியவும்,

இன்றைய அரசியல் நிலை பற்றியும் கூட்டணி எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றியும், விளக்கமளிக்கும் பொருட்டும்,

சென்ற 2ந் திகதி உகந்தை மலையில் ஆரம்பித்து அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமங்கள் எங்கும் எட்டு நாட்களாக நடைபெற்ற கிராம யாத்திரை 21-2-81 ல் ஊர்காவற்றுறைத் தொகுதியில் தொடங்கி யாழ்மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒரு நாளாக நடைபெற இருக்கின்றன.

காங்கேசன்துறைத் தொகுதியின் மாதகல் பெரியவிளான் கிராமங்களில் 26-2-81 வியாழக்கிழமை நடைபெறும். தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த எல்லாக் கிராமங்களிலும் 28-2-81 சனிக்கிழமை நடைபெற இருக்கின்றது.

தலைவர்களும் தொண்டர்களும் ஆறு குழுக்களாகப் பிரிந்து கீழ்க்கண்ட கிராமங்ளுக்குச் செல்வார்கள்.

1. மல்லாகம், அளவெட்டி வடக்கு, அளவெட்டிதெற்கு,
2. தெல்லிப்பழை கிழக்கு, பழைவீமன்காமம், மாவிட்டபுரம்,
3. தெல்லிப்பழை தென் மேற்கு, தெல்லிப்பழை வட மேற்கு, கீரிமலை,
4. காங்கேசன்துறை, மயிலிட்டிக்கரை, மயிலிட்டி, வடக்கு,
5. கட்டுவன், மயிலிட்டி, தெற்கு, குரும்பசிட்டி,
6. பலாலி, வசாவிளான்,

தெல்லிப்பழையில் உள்ள தமிழர் விடுதலைக்கூட்டணி செயலகத்தில் அதிகாலை உணவை முடித்துக்கொண்டு அவ்வக்குழுக்களுக்குக் குறிப்பிட்ட கிராமங்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினரும் தொண்டர்களும் காலை 9 மணிக்குச் செல்வார்கள்.

மக்களோடு உரையாடுதல், கூட்டணி உறுப்பினரைச் சேர்த்தல், உதயசூரியன் பத்திரிகை விற்றல், கிளைகளைக் கலந்து உரையாடுதல் முதலியன நாள் முழுவதும் நடைபெறும். கிராமங்களில் உள்ள சாதி சமய ஒற்றுமைக்குத் தடையான பிரச்சனைகள் இருப்பின் அவையும் ஆராயப்படும். உறுப்பினராகச் சேருவோரும், ஏற்கனவே சேர்ந்து சந்தா செலுத்தாதோரும் தங்கள் சந்தாப்பணத்தைச் செலுத்துமாறு வேண்டுகிறேன்.

அன்றுமாலை கீழ்க்கண்ட இடங்களில் கருத்தரங்குகள் நடைபெறும்.

மல்லாகம், தெல்லிப்பழை, கருகம்பனை, ஊறணி, கட்டுவன், பலாலி.

இந்நிகழ்ச்சிகளில் தமிழர் விடுதலைகூட்டணி உறுப்பினர், அனுதாபிகள், இன விடுதலையை நாடும் எல்லோரையும் கலந்து கிராமயாத்திரை வெற்றிகரமாக நடக்க ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

இவ்வாறு- காங்கேசன்துறை பா. உ. வும் தமிழர் தலைவருமான அமிர் தமது தொகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்னகத்தில் மிகுந்த பரபரப்பையூட்டி
வெற்றிவிழாக் கொண்டாடிய
"வெள்ளி விழா" வண்ணச் சித்திரம்
சாந்தி -(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி. ப. 2-15, 6-00,
இரவு 9-30
சரத்பாபு, சுமலதா, சுந்தரராஜன்,
எம். என். ராஜம்
ஆகியோர் நடித்த
பி. எஸ். வீரப்பா அளிக்கும்....
திசை மாறிய பறவைகள்
(முற்றிலும் மாறுபட்ட, திசை திருப்பமான கதை)

உதயசூரியன் வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்டுயாழ்.புனிதவளன் கத்தோலிக்கஅச்சகத்தில் 27-2-81ல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

லாலா
சோப்


லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி